871

# தமிழ் நாட்டு வாசகம்

மூன்றாம் புத்தகம்



871
3-5
OFFICE OF THE REGISTRAR OF B...
20 SEP 1957
MADRAS
586
TB
031 (37)
N57
147808

…ன் பதிப்பகம்

# தமிழ் நாட்டு வாசகம்

## மூன்றும் புத்தகம்

மணி. முத்துசாமி
தொகுத்தது

Approved by the Madras Text Book Committee for Class use: Vide page 2 of consolidated list Part I dated 4—4—1956

(Paper used 32 lbs. White Printing Paper)

(திருத்திய புதிய பதிப்பு)

முருகன் பதிப்பகம்
திருச்சிராப்பள்ளி–2

பதிப்புரிமை] [விலை : 50 நயா பைசா

த. III-1

முதல் பதிப்பு: 1950
திருத்திய பதிப்பு: 1955
மூன்றும் பதிப்பு: 1956
நான்காம் பதிப்பு: ஜூலை 1956
ஐந்தாம் பதிப்பு: 1957

T9
O51(37)
N57

# முகவுரை

பாட புத்தகங்கள் கால வகைக்கேற்ப முன்னேற்ற முறையில் சமூக வாழ்விற்கியையவும், நல்லறிவும், நற்பண்பும், ஒற்றுமையும், ஒத்தவுணர்ச்சியும் இளமை முதலே படியும் வகையில் பழையன கழிக்கப் பெற்றும் புதியன புகுக்கப்பெற்றும் தெள்ளிய நடையில் பொருட்சுவை சொற்சுவைகள் வகுப்புவாரியாகவும் படிப்படியாகவும் அமைந்தனவாய், புதிய முறையில் வெளிவருதல் நலம் தருவதாகும்.

இந்நோக்கத்தை முற்றிலும் தழுவி வாழ்க்கைக்குப் பயன்படும் சிறந்த பொருள்கள் அமைந்த பாடங்களை உடையதாய் இப் பாடநூல் வெளிவருகின்றது.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடலை வெளியிட அநுமதியளித்த காரைக்குடி, புதுமைப் பதிப்பகத்தாருக்கும், தம் பாடலை வெளியிட அநுமதியளித்த நாமக்கல் கவிஞர் திரு. வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

இப்புதிய பதிப்பு, வேண்டும் மாறுதல்களுடன் செவ்விய முறையில் அமைக்கப் பெற்றுள்ளது.

ஆசிரியர்களும், அதிகாரிகளும், நிர்வாகிகளும் இப் புத்தகங்களை ஆதரித்து எம்மை இப்பணியில் ஊக்கமுறச் செய்ய வேண்டுகின்றோம்.

பதிப்பாளர்

147808

PRINTER: REV. FR. K. A. LOURDES, SUPERINTENDENT,
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY - 1. 1957.

# பொருள் அடக்கம்


| எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1. | செந்தமிழ் நாடு | ... ... 5 |
| 2. | பெற்றோர் | ... ... 6 |
| 3. | உன் கடமை | ... ... 9 |
| 4. | மலைகள் | ... ... 12 |
| 5. | இலக்கணம்—1 | ... ... 15 |
| 6. | நெற்பானையும் எலியும் | ... ... 16 |
| 7. | தமிழ் மொழி | ... ... 17 |
| 8. | சிறுமியின் தாய்மொழிப் பற்று | ... ... 20 |
| 9. | தேன் | ... ... 23 |
| 10. | நல்ல மகன் | ... ... 27 |
| 11. | தேசிங்குராசனின் திறமை | ... ... 30 |
| 12. | சிற்பம் | ... ... 31 |
| 13. | இலக்கணம்—2 | ... ... 34 |
| 14. | சுகவழி | ... ... 35 |
| 15. | விடாமுயற்சி வெற்றிதரும் | ... ... 39 |
| 16. | நக்ஷத்திரம் | ... ... 43 |
| 17. | காய்கறித் தோட்டம் | ... ... 46 |
| 18. | கொடிகள் | ... ... 49 |
| 19. | மதுரை | ... ... 50 |
| 20. | நரியின் தந்திரம் (படக் கதை) | ... ... 53 |
| 21. | தபால் | ... ... 56 |
| 22. | நாமக்கல் கவிஞர் | ... ... 60 |
| 23. | யாராலே ? | ... ... 62 |
| 24. | மாணவர் சமூகத் தொண்டு | ... ... 63 |
| 25. | துட்டன் அடைந்த பலன் | ... ... 67 |
| 26. | ஆடையும் அணியும் | ... ... 70 |
| 27. | இயேசுநாதர் | ... ... 73 |
| 28. | கிராம ஆட்சி | ... ... 75 |
| 29. | விடுதலை | ... ... 78 |
| 30. | பொய் மெய்யாகுமா ? | ... ... 79 |
| 31. | நாகரிகம் | ... ... 82 |
| 32. | வீரத்தாய் (நாடகம்) | ... ... 84 |
| 33. | வாழ்த்து | ... ... 87 |
| 34. | ஆத்திசூடி | ... ... 87 |
| 35. | கொன்றைவேந்தன் | ... ... 88 |



இயேசுநாதர்

# தமிழ் நாட்டு வாசகம்

## மூன்றும் புத்தகம்

---

## 1. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

நீலத் திரைக்கடல் ஓரத்தி லேநின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு.

—அமரகவி பாரதியார்.



## 2. என் பெற்றோர்

இவர்கள் என் தாயும் தந்தையும் ஆவர். இவர்கள் என் பெற்றோர். நான் அன்புடன் இவர்களை வணங்குகிறேன். பணிவுடன் இவர்களிடம் நடக்கிறேன். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அல்லவா ?

குழந்தைப் பருவத்தில் என்னைப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தவள் என் தாய். என் தாய் எனக்கு நல்ல உணவு அளித்து மிகச் செல்வமாக வளர்க்கிருள். நோய்கள் வராமல் என்னைப் பத்திரமாக வளர்க்கிருள். நோய் வந்துவிட்டால், மருந்து கொடுத்து, அந்நோயைத் தீர்க்கிருள். நல்ல உடை உடுத்தியும், அழகு செய்தும் என்னைக் கண்டு

மகிழ்கிருள். அடிக்கடி நல்ல புத்திமதிகளை எனக்குக் கூறுகிருள்.

என் தாய் என்னை நன்ருய் வளர்ப்பதற்கு எல்லா உதவிகளையும் செய்பவர் என் தந்தை. இவர் பாடுபட்டுப் பொருள் சம்பாதிக்கிருர்; அப்பொருளை வீட்டிற்கு உதவுகிருர்; உணவுப் பொருள்கள், உடைகள், புத்தகங்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் வாங்கித் தருகிருர்; பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி என்னைப் படிக்கவைக்கிருர்.

என் பெற்ருேர்கள் எப்போதும் என்னுடைய நன்மைகளையே கருதுகிருர்கள். நான் நல்ல வாழ்வு பெறவேண்டும் என்பதே இவர்களுடைய விருப்பம். இவர்கள் நல்ல புத்திமதிகளை எனக்கு சொல்லு கிருர்கள்.

சில சமயங்களில் நான் சிறு குற்றங்கள் செய்து விடுவது உண்டு. அப்போது இவர்கள் என்னைக் கண்டிப்பதும் உண்டு. இவர்கள் அப்படிக் கண்டிப்பது என்மீது உள்ள அன்பிஞல் ஆகும். நான் திருந்துவதற் காகவே இவர்கள் என்னைக் கண்டிக்கிருர்கள்.

நான் தெரியாமல் ஏதேனும் குற்றங்கள் செய்து விட்டால் பிறகு அவைகளை ஒப்புக்கொள்வேன். நான் குற்றம் என்று தெரிந்த காரியத்தைப் பிறகு செய்ய மாட்டேன். அறியாமல் செய்த குற்றத்திற்கு மன்னிப்பு உண்டு. அறிந்து குற்றம் செய்தால் அதற்கு மன்னிப்பு உண்டா? குற்றங்களை உணர்ந்து அவற்றை நீக்கிக் கொண்டால்தான் உயர்வு அடையலாம்.

பெற்ருேர்கள், பிள்ளைகளின் நன்மையில் கருத் துள்ளவர்கள்; நன்மை தீமைகளை நன்ருய் அறிந்த வர்கள். ஆகையால், பெற்ருேர்கள் சொல்கிற வழியில்

நான் தவருது நடப்பேன். நான் அவர்கள் "செய்" என்று கூறும் காரியங்களைச் செய்வேன்; "செய்யாதே" என்று கூறும் காரியங்களைச் செய்யமாட்டேன். அவர்களையே முதல் தெய்வமாக நான் வணங்குவேன்.

"தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை"
"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை."

| | | |
|---|---|---|
| பெற்ருேர் | பக்தி | புத்திமதி |
| தாலாட்டி | பணிவு | கருதுகிருர்கள் |
| சீராட்டி | அன்னை | நல்ல வாழ்வு |
| பாலூட்டி | பிதா | கண்டிப்பது |
| செல்வமாக | தெய்வம் | திருந்துவதற்காக |
| ஒப்புக்கொள்வேன் | மன்னிப்பு | உணர்ந்து |

## கேள்விகள்

*1. தாய் குழந்தைக்குச் செய்யும் உதவிகள் யாவை?*

*2. தகப்பனுர் செய்யும் உதவிகள் யாவை?*

*3. நீ எந்தக் காரியங்களைச் செய்வாய்? எவைகளைச் செய்ய மாட்டாய்?*

## பயிற்சி

*செய்வேன், செய்யமாட்டேன், பேசுவேன், பேசமாட்டேன் சேர், சேராதே, நடக்கலாம், நடக்கக்கூடாது.*

*செய்யக்கூடியவைகளை, செய்யக்கூடாதவைகளை, பொய், மெய், நல்லவருடன், கெட்டவருடன், நேர் வழியில், தப்பான வழியில்.*

*1. செய்யக்கூடியவைகளை நான் செய்வேன். செய்யக்கூடாதவைகளை நான் செய்யமாட்டேன்—இம்மாதிரியே மற்றவைகளை எழுது.*

2.

3.

4.

**கோடிட்ட இடங்களில் ஏற்ற சொல்லைச் சேர்த்துப்படி :—**

*1. நான் குற்றம் செய்தால் பெற்ருேர்கள் ——— ———.*

*2. நான் குற்றம் செய்யாவிட்டால் பெற்ருேர்கள் ———.*



## 3. உன் கடமை

"கண்ணா, இங்கே வா! இந்தக் காகிதத் துண்டுகளைக் கிழித்து இத் திண்ணையில் போட்டது யார்?" என்று கேட்டான், பொன்னன்.

"ஏன் அண்ணா, நான்தான் போட்டேன். வேண்டாத காகிதம், ஆகையால் கிழித்துப் போட்டேன்" என்றான் கண்ணன்.

*அண்ணன் :* வேண்டாத காகிதத்தைக் கிழித்தது சரி. கிழித்த துண்டுகளை இங்கே போடலாமா? காற்றில் பறந்து திண்ணை முழுவதும் குப்பையாய் இருக்கிறது பார்! நமது இடத்தை நாம்தானே சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்?

*கண்ணன் :* உண்மைதான், அண்ணா! இனி, நான் இவ்வாறு இடத்தைக் குப்பையாக்க மாட்டேன்.

*அண்ணன் :* அதுதான் நல்லது. வேண்டாத பொருள் இருந்தால் அதை உடனே குப்பைத்தொட்டியில் போட்டுவிட வேண்டும்; கண்ட இடத்தில் போட்டுக் குப்பையாக்கக் கூடாது. நாம் வசிக்கும் இடம் சுத்தமாய் இருந்தால் பார்ப்பதற்கு நன்ருய் இருக்கும். அதனுல் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும். நாம் எவ்வளவு சுத்தமாயும் ஒழுங்காயும் இருக்கிருேம் என்பதற்கு அது அடையாளம்.

*கண்ணன் :* பள்ளிக்கூடத்தில் நாங்கள் காகிதங்களைக் கிழித்துப் போடுவோம். அந்தப் பழக்கம் இங்கேயும் வந்து விட்டது.

*அண்ணன் :* அந்தப் பழக்கம் கெட்டது. பள்ளிக்கூடத்தை நமது வீட்டைப் போலவே நினைக்க வேண்டும். நாம் படிக்கிற இடமல்லவா? கண்ட இடத்தில் குப்பை செய்யக்கூடாது. வேண்டாத பொருளை அதற்கென்று வைத்திருக்கும் பெட்டியில் போட்டுவிடவேண்டும். நாம் படிக்கும் இடத்தில் கீழே குப்பை காணப்பட்டால் அதையெடுத்துப் பெட்டியில் போடவேண்டும். 'யாரோ போட்ட குப்பை, நமக்கென்ன' என்று இருக்கக்கூடாது.

*கண்ணன் :* இனிமேல் கண்ட இடத்தில் குப்பை செய்யமாட்டேன்; குப்பையைக் கண்டால் அதை எடுத்துப் பெட்டியில் போடுவேன், அண்ணு!

*அண்ணன் :* இன்னும், நீ நடந்து செல்லும் வழியில் கல், முள், கண்ணுடித்துண்டு முதலியவை காணப்பட்டால் அவற்றை யெடுத்து அருகில் இருக்கும் குப்பைத் தொட்டியிலோ, அல்லது ஓரத்திலோ போடவேண்டும். நாம் தெரியாமல் நடக்கும் பொழுது நமது காலில் முள் குத்திவிட்டால்

துன்பப்படுவோம் அல்லவா? பிறரும் அப்படித்தானே வருந்துவார்கள்? ஆகையால், கல், முள் முதலியவற்றை எடுத்து எறிந்துவிட்டால், அதனால் பிறருக்கு நன்மை ஏற்படும்.

*கண்ணன்:* இனி, நான் செல்லும் வழியில் கல் முதலியவை கிடந்தால் எடுத்து ஓரத்தில் போட்டு விடுகிறேன்.

*அண்ணன்:* நமது வீட்டைப்போலவே, பள்ளிக் கூடத்தையும் வெளியிடத்தையும் நினைத்து நடந்து கொள்ளவேண்டும். இது உன் கடமை. இதனால் உன்னிடம் எல்லோரும் அன்பாய் இருப்பார்கள்; நல்ல பையன் என்று புகழ்வார்கள்.

| | | |
|---|---|---|
| துண்டுகள் | கண்ணாடித்துண்டு | வருந்துவார்கள் |
| வேண்டாத | பள்ளிக்கூடம் | ஓரத்தில் |
| குப்பை | வெளியிடம் | நடக்கும் வழி |
| வீடு | துன்பப்படுவோம் | பிறர் |

### கேள்விகள்

*1. அண்ணன் கூறிய அறிவுரை என்ன?*

*2. வீடு, பள்ளிக்கூடம், நடக்கும் வழி—இவற்றில் நீ செய்ய வேண்டிய கடமை என்ன?*

### பயிற்சி

*1. துன்பப்படுவோம், வருந்துவார்கள், நன்மையாகும்—இவற்றை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.*

*2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை வைத்துச்சொல்: நான் வழியில் கிடக்கும்———எடுத்து ஓரத்தில் போடுவேன். வகுப்பு அறையில்———கிடந்தால், நீ அதை———போடு.*

*3. வா—வருகிறான்; **போடு**—போட்டேன்; **நில்**—நின்றான். இதுபோல் பின்வரும் சொற்களை வைத்து எழுது:—படி, எழுது, வீடு, போ, காண்.*



# 4. மலைகள்

பிள்ளைகளே! நீங்கள் சிறு சிறு மலைகளைப் பார்த்திருப்பீர்கள். சிறிய மலைக்குக் குன்று என்று பெயர். சில குன்றுகளின் மேல் அழகான கோயில்கள் கட்டப்பட்டிருக்கும்.

குன்றுகளைப்போல் பல மடங்கு பெரியவை மலைகள். அவை உயரமாயும், வெகு தூரம் பரவியும் இருக்கும். மலைகளின்மேல் காடுகளும், ஆங்காங்குச் சிறு ஊர்களும் உண்டு. அவ்வூர்களில் மனிதர்கள் வசிப்பார்கள். அவர்கள் பல வேலைகளைச் செய்வார்கள்.

நமது நாட்டில் நீலகிரி, கோடைக்கானல் முதலிய இடங்களில் மலைகள் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, பழனி முதலிய இடங்களிலும் குன்றுகள் இருக்கின்றன.

சில மலைகள் செங்குத்தாக இருக்கும். சில மலைகள் சரிவாக இருக்கும். மலைகளின் மேல் பரந்த

நிலப்பரப்பு உண்டு. அங்கே மரங்கள் அடர்த்தியாக உள்ள காடுகள் காணப்படும். அக்காடுகளில் தேக்கு, அகில், வேங்கை, முதலிய பலவிதமான பெரிய மரங்கள் வளரும். அம்மரங்களிலிருந்து பெரிய விட்டங்களும், அட்டைகளும், பலகைகளும் அறுக்கப் படும். விறகுக்காகும், பலவகை மரங்களும் அக்காடு களில் இருக்கும்.

காடுகள் இல்லாத இடங்களில் ஊர்கள் ஏற்பட் டிருக்கும். அவ்வூரார் அங்குள்ள நிலங்களைப் பண் படுத்துவார்கள். காப்பிக்கொட்டை, தேயிலை உருளைக் கிழங்கு, பல காய்வகைகள், மிளகு, சீரகம் வகைகள் பழ மரங்கள் இவைகளைப் பயிர் செய்வார்கள். ஆகவே, மரம் அறுப்பதும், விவசாயம் செய்வதும் மலைவாசிகள் செய்யும் தொழில்களாகும். மலைக்காடு களில் தேன் மிகுதியாகக் கிடைக்கும். தேன் எடுப் பதும் அங்குள்ளவர்களுக்கு ஒரு தொழிலாகும்.

மலை நாட்டில் வசிப்பவர்கள், மலைகளில் கிடைக் கும் பொருள்களை மற்ற இடங்களில் கொண்டுவந்து விற்பார்கள் ; அங்கிருந்து தங்களுக்கு வேண்டிய தானியங்கள், உப்பு, ஆடைகள் முதலியவைகளை வாங்கிக்கொண்டு செல்வார்கள்.

உயரமான மலைகள் மேகத்தைத் தடுக்கும். மலைக் காடுகளிலுள்ள மரங்களால் குளிர்காற்று ஆகாயத்தில் பரவும். அக்காற்றினுல் மேகங்கள் குளிர்ச்சி அடையும் குளிர்ச்சி அடைந்த மேகங்கள் மழையாகப் பெய்யும். ஆகையால், மலைகளிலும் மலைகளை அடுத்துள்ள இடங் களிலும் மழை மிகுதியாகப் பெய்யும். அம்மழைநீர் ண்டு ஆறுகளாகப் பெரும். காவேரி, வைகை

முதலிய ஆறுகளெல்லாம் மலைகளிலிருந்தே தோன்றுகின்றன. ஆறுகள் சம நிலங்களில் பாய்ந்து அவ்விடங்களைச் செழிப்படையும்படி செய்கின்றன. மலைகளால் நாட்டிற்கு எவ்வளவு உபயோகம் பார்த்தீர்களா!

| | | |
|---|---|---|
| மலை | மலைவாசி | பலமடங்கு |
| குன்று | மலைநாடு | நிலப்பரப்பு |
| செங்குத்து | மலைக்காடு | பண்படுத்துவார்கள் |
| சரிவு | மேகம் | உபயோகம் |
| திரண்டு | பெருகும் | கோடைக்கானல் |

## கேள்விகள்

1. *மலைகளில் என்னென்ன விளையும்?*
2. *மலைவாசிகள் எவ்வாறு வாழ்கிறார்கள்?*
3. *மலைகளால் என்னென்ன உபயோகங்கள் உண்டு?*

## பயிற்சி

1. *நீ பார்த்துள்ள ஒரு மலை அல்லது குன்றின் காட்சியைப் பற்றிச் சொல்லு.*

2. *கோடுள்ள இடங்களில் ஏற்ற சொல்லை எழுதிப் படி;*

(1) *சில மலைகள் ——— இருக்கும்.*

(2) *சிறிய மலைகளுக்கு ——— என்று பெயர்.*

(3) *மலைகள் ——— இடங்களில் மழை அதிகமாகப் பெய்யும்.*

(4) *ஆறுகள் ——— தோன்றுகின்றன.*

(5) *மழைநீர் ——— ஆறுகளாகப் பெருகும்.*

## தெரிந்துகொள்

*அ + ஊர் = அவ்வூர்.* *அ + மரம் = அம்மரம்.*

*இ + ஊர் = இவ்வூர்.* *இ + மரம் = இம்மரம்.*

# 5. இலக்கணம்—1

'அம்மா' என்பது ஒரு சொல். இச்சொல்லில், அ, ம், மா என்ற மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றுள் அ என்பது உயிரெழுத்து, ம் என்பது மெய்யெழுத்து, மா என்பது உயிர்மெய்யெழுத்து. இது ம் + ஆ = மா என்று ஆகும்.

ஃ என்ற எழுத்தை நீங்கள் படித்தீர்கள். இது ஆய்த எழுத்து எனப்படும்.

தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்று நான்கு வகைப்படும்.

உயிரெழுத்துக்கள் 12; மெய்யெழுத்துக்கள் 18; உயிர்மெய்யெழுத்துக்கள் 216; ஆய்தம் 1. ஆகத் தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247.

| | | உயிர் எழுத்துக்கள் 12 | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| | | உயிர்மெய்யெழுத்துக்கள் 216 | | | | | | | | | | | |
| மெய்யெழுத்துக்கள் 18 | க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| | ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| | ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| | ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| | ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| | ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| | த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| | ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| | ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| | ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| | ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| | ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| | ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| | வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| | ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| | ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| | ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| | ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# 6. நெற்பானையும் எலியும்



பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையின் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா.



உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று—வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா.

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு
பூனை எலியினைக் கண்டதடா—ஓடிப்
போய்அதைக் கவ்வியே சென்றதடா.




கள்ள வழியிற் செல்பவரை—எமன்
காலடிப்பற்றி தொடர்வானடா
உள்ளபடியே நடப்பவர்க்குத் தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# 7. தமிழ் மொழி

நான் பேசும் மொழி, தமிழ் மொழி; படிக்கும் மொழியும் தமிழ் மொழிதான். இது என் தாய் மொழி.

நான் பிறந்ததும் என் தாய் என்னிடம் தமிழில் பேசினுள்: 'கண்ணே', 'மணியே' என்று கொஞ்சினுள். அதனுல் நான் பேசத் தெரிந்ததும், தமிழிலேயே 'அப்பா' 'அம்மா' என்று சொல்லத் தொடங்கினேன். 'அம்மா பால்', 'அம்மா சோறு போடு' என்றெல்லாம் தமிழிலேயே கூறினேன், இதனுல், தமிழ் எனக்குத் தாய்மொழி ஆயிற்று. நான் வீட்டில் பேசுவதும் தமிழ்; அக்கம்பக்கத்தாருடன் உரையாடுவதும் தமிழ்; கடைக்குச் சென்று வியாபாரம் செய்யும்போது பேசுவதும் தமிழ்.

தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் தமிழர். தமிழ் வழங்கும் நாடு தமிழ் நாடு. நாம் வசிப்பது தமிழ் நாடு. தமிழ் நாடு நமது தாய் நாடு.

தாய் உடலே வளர்க்கிருள். தாய்மொழி அறிவை வளர்க்கிறது. பிள்ளேகள் தாயினிடத்தில் பக்தியும் பணிவும்கொண்டு நடக்கவேண்டும். அதுபோல் தமிழர்களாகிய நாம் தாய்மொழியாகிய தமிழை நன்ருய்க் கற்கவேண்டும்.

தமிழ் மொழி மிகப் பழமையானது. இதில், இலக்கணம், இலக்கியம், அரசியல், மருத்துவம், கணிதம் முதலிய எல்லாக் கலேகளிலும் நூல்கள் உண்டு. சிறியவர்கள் படிக்கக்கூடிய சிறிய நூல்கள், பெரியவர்கள் படிக்கக்கூடிய பெரிய நூல்கள் ஆகிய எல்லாம் தமிழில்

உண்டு. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலிய நீதி நூல்கள் தமிழில் இருக்கின்றன. சிறுவர்கள் சிறிய நூல்களை முதலில் படிக்கவேண்டும். பிறகு படிப்படியாகப் பெரிய நூல்களைப் படிக்க வேண்டும்.

இக்காலத்தில் சிறுவர்களுக்காகப் பல புதிய நூல்கள் படங்களுடன் வெளிவருகின்றன. அவற்றை பிள்ளைகள் படிக்கவேண்டும். அமரகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை முதலிய இக் காலக் கவிஞர்கள், சிறுவர்களுக்காகப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்கள். அவற்றையும் படிக்கவேண்டும்.

தமிழை முதன்மையாகக் கற்கவேண்டும் ; தமிழில் நல்ல தேர்ச்சி பெறவேண்டும் ; பிழையில்லாமல் பேசவும் எழுதவும் பயிலவேண்டும்,

தமிழை கற்பது தமிழர் கடமை. நாம் நமது தாய் மொழியாகிய தமிழைக் கற்றுச் சிறப்படைவோமாக.

| | | |
|---|---|---|
| தாய் மொழி | அரசியல் | அக்கம்பக்கம் |
| தாய் நாடு | மருத்துவம் | பயிலவேண்டும் |
| தமிழ் மொழி | கணிதம் | அமரகவி |
| தமிழ் மக்கள் | இலக்கணம் | கவிமணி |
| தமிழ் நாடு | இலக்கியம் | நீதிநூல்கள் |

### கேள்விகள்

1. *நமது தாய்மொழி எது ?*
2. *தாய்மொழி என்று சொல்வது எதனால் ?*

3. தமிழ்மொழி எப்படிப்பட்டது ?

4. இக்காலக் கவிஞர்கள் யாவர் ?

5. தமிழரின் கடமை என்ன ?

## பயிற்சி

1. கோடுகள் உள்ள இடங்களில் இச்சொற்களைத் தக்கபடி சேர்த்துப் படி :

இனிமை, எளிதானது, மொழி, படிக்கவேண்டும்.

1. நமது தாய் —— தமிழ்.
2. தமிழ்மொழி, —— உடையது.
3. அது கற்பதற்கு —— .
4. நாம் தாய்மொழியைப் —— .

2. **எதிர்ச்சொற்கள் :** பழமை × புதுமை. இச் சொற்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான பொருளுள்ள சொற்கள் ஆகும். ஆகையால், இவை எதிர்ச்சொற்கள் எனப்படும். கீழ் வருவனவற்றிற்கு எதிர்ச்சொற்கள் கூறுக :—

பெரிது, கருமை, நீளம், படிப்பான், உயரம், மெய், பள்ளம்.

3. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள உயிரெழுத்து, மெய் யெழுத்து, உயிர்மெய்யெழுத்து ஆகியவற்றைக் கூறு :—

1. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஔவையார் எழுதிய நூல்கள்.
2. தமிழ்மொழியை நாம் நன்றாய் கற்கவேண்டும்.

# 8. சிறுமியின் தாய்மொழிப் பற்று

ஜெர்மனி என்பது ஒரு தேசம். அத்தேசத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு முன், கெய்சர் என்பவர் அரசாட்சி செய்துவந்தார். அவருக்குப் போர்செய்வதில் விருப்பம் அதிகம். ஆகையால், அவர் ஒரு சமயம் போர்செய்து அருகிலிருந்த ஒரு சிறு நாட்டைக் கைப்பற்றினர். அதன் பெயர் ஆல்ஸாஸ் லோரைன் என்பதாகும்.

கெய்சர், லோரைன் நாட்டில் தன் அதிகாரத்தைச் செலுத்தினர். அந்நாட்டில் ஜெர்மன் மொழியைக் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார். இன்னும் 'ஜெர்மன் மொழியிலேயே பேசவேண்டும்; லோரைன் மொழியில் பேசக்கூடாது' என்றும் கெய்சர் கட்டளையிட்டார். இக்கட்டளையை மீறி எவரேனும் லோரைன் மொழியில் பேசினல் தண்டனை கிடைக்கும்.

லோரைன் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் ஜெர்மன் மொழியைக் கற்பித்து வந்தார்கள்; லோரைன் மொழியைக் கற்பிக்கவில்லை. லோரைன் நாட்டு மக்கள் தாய்மொழிப்பற்று உள்ளவர்கள். ஆகையால் தங்கள் தாய்மொழியாகிய லோரைன் மொழியைக் கற்கவேண்டுமென்று ஆசைகொண்டார்கள்; இரவில் எவருக்கும் தெரியாமல் அம்மொழியைக் கற்று வந்தார்கள். இவ்வாறு சில ஆண்டுகள் சென்றன.

ஒருநாள் கெய்சரின் மனைவி லோரைன் நாட்டுக்கு வந்தாள். அவள் ஒரு பெண் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் பார்வையிட்டாள். ஆசிரியைகளும்

சிறுமிகளும் கெய்சரினியை வரவேற்று வணக்கம் செய்தனர். அவர்கள் ஜெர்மன் மொழியில் பேசியதைக் கேட்டு, கெய்சரினி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

கெய்சரினி பள்ளிக்கூடச் சிறுமிகளிடம் ஜெர்மன் மொழியில் பேசினாள். அவள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாச் சிறுமிகளும் நன்றாய் விடை சொன்னார்கள். அவர்களில் ஒரு பெண் தெளிவாகவும் பயமில்லாமலும் ஜெர்மன் மொழியில் விடை சொன்னாள். அதைக் கேட்ட கெய்சரினி மிகவும் மகிழ்ந்தாள். அவள் அச் சிறுமியைப் பார்த்து, "குழந்தாய்! நீ திறமையாகப் பேசுகிறாய்! உனக்குப் பரிசு கொடுக்க விரும்புகிறேன். என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

அச்சிறுமி கொஞ்சமும் அஞ்சாமல், "தாயே! எங்கள் நாட்டில் லோரைன் மொழியிலேயே பேச நாங்கள் விரும்புகிறோம். ஆகையால், 'லோரைன் மொழியில் பேசக்கூடாது' என்ற கட்டளையை மாற்ற வேண்டும். எங்கள் பள்ளிக்கூடங்களில் லோரைன் மொழியைக் கற்பிக்கும்படி கட்டளையிடவேண்டும். இதுவே நான் விரும்பும் பரிசு!" என்று தெரிவித்தாள்.

இதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கெய்சரினி சிறுமியைப் பார்த்து, "குழந்தாய்! உன் தாய் மொழிப் பற்றை அறிந்து மகிழ்கிறேன். விரைவில் உன் விருப்பத்தை நிறைவேற்றச் செய்கிறேன்" என்று சொல்லி வாழ்த்திவிட்டுப் போனாள்.

சில நாட்கள் சென்ற பிறகு, "லோரைன் நாட்டினர் லோரைன் மொழியில் பேசலாம்; பள்ளிக்கூடங்களில் லோரைன் மொழியைக் கற்பிக்கலாம்" என்ற

உத்தரவு வந்தது. எல்லோரும் மகிழ்ச்சியடைந்து சிறுமியைப் போற்றினார்கள். சிறுமியின் தாய்மொழிப் பற்றைப் பார்த்தீர்களா ?

| | | |
|---|---|---|
| ஆட்சி | அதிகாரம் | ஆண்டு |
| போர் | கட்டளை | மகிழ்ச்சி |
| பற்று | உத்தரவு | திறமை |
| சிறுமி | தண்டனை | அஞ்சாமல் |
| விடை | வணக்கம் | விரைவில் |

## கேள்விகள்

1. கெய்சர் என்பவர் யார்? அவர் லோரைன் நாட்டினருக்கு என்ன கட்டளை இட்டார்?

2. கெய்சரினி, சிறுமிக்கு ஏன் பரிசு கொடுக்க விரும்பினாள் ?

3. லோரைன் நாட்டுச் சிறுமியின் தாய்மொழிப் பற்று எதனால் தெரிகிறது.

## பயிற்சி

1. கோடுள்ள இடங்களில் ஏற்ற சொல்லை வைத்துப்படி :—

(1) கெய்சரினி ஜெர்மன் மொழியில்———கேட்டாள்.

(2) சிறுமிகள் நன்றாய்————சொன்னார்கள்.

(3) சிறுமியின் தாய்மொழி————சிறந்தது.

2. தெரிந்துகொள் :—

அறி ; அறிந்தான் ; அறிந்து ; அறியாமல் ; அஞ்சு ; அஞ்சினாள் ; அஞ்சி ; அஞ்சாமல் ; பேசு ; பேசினாள் ; பேசி ; பேசாமல்.



# 9. தேன்

*அண்ணன் :* தம்பீ, உன் உள்ளங் கையை நீட்டு; வெல்லப்பாகுபோல் இருக்கும் இதை, நாக்கினுல சுவைத்துப் பார்.

*தம்பி :* இது என்ன அண்ணு! மிகவும் இனிப் பாக இருக்கிறதே! இதன் பெயர் என்ன ?

*அண்ணன் :* இதன் பெயர் தேன். இது ஒருவ ரால் செய்யப்படுவது அன்று. தேன் ஒரு இயற்கைப் பொருள்.

*தம்பி :* தேன் எங்கே உண்டாகிறது? எவ்வாறு நமக்குக் கிடைக்கிறது.

*அண்ணன் :* தேன், பூக்களில் உண்டாகிறது. வாழைப்பூவின் இதழினுள் பார். ஒரு சிறு துளி தேன் இருக்கும். இவ்வாறே எல்லா பூக்களிலும் தேன் இருக்கிறது. பூக்களில் உள்ள தேனை ஒரு வகை ஈக்கள் சேர்க்கின்றன. மனிதர்கள் அந்த ஈக்களை விரட்டித் தேனை எடுக்கிருர்கள்.

*தம்பி*: ஈக்கள் தேனைச் சேர்ப்பது எப்படி? அதை மனிதர்கள் எடுத்து வருவது எப்படி? எல்லா வற்றையும் எனக்குத் தெளிவாகச் சொல் அண்ணா!

*அண்ணன்*: சொல்லுகிறேன் கேள்:

தேன் சேர்க்கும் ஈக்கள் நாம் வீட்டில் காணும் சாதாரண ஈக்கள் அல்ல. அவை வேறு வகையான ஈக்கள். அவை நல்ல புத்தி கூர்மையும், சாமர்த்திய மும், ஒற்றுமையும் உடையவை. தேன் சேர்ப்பதால் அவை தேனீக்கள் எனப்படும்.

தேனீக்களின் உடம்பிலிருந்து ஒரு வகை மெழுகு வெளிப்படும். அம்மெழுகைக் கொண்டு அவை கூடு கட்டும். அதற்குத் தேன்கூடு என்று பெயர். அக் கூட்டினுள் பல அறைகளையும் அமைக்கும். இராணி ஈ என்பது, அந்த ஈக்கூட்டத்திற்குத் தலைமையாகும். அது கூட்டினுள் இருக்கும். பல ஆண் ஈக்கள் கூட்டைக் காவல் செய்யும்.

சிறிய பெண் ஈக்கள் பல உண்டு. அவைகள் பூக்கள் தோறும் செல்லும்; துளித் துளியாக உள்ள தேனை உட்கொள்ளும். பிறகு, அவை கூட்டிற்கு வந்து கூட்டில் உள்ள அறைகளில் அத்தேனை உமிழும். இதுதான் தேன்சேர்த்தல் ஆகும். தேனீக்கள் தேய் பிறை முழுவதும் தேனைச் சேகரிக்கும். அமாவாசை யன்று தேன்கூடு தேன் நிரம்பி இருக்கும். வளர்பிறை யில் அவைகள் அத்தேனைக் குடித்து களிக்கும்.

தேன்கூடு நிறைந்திருப்பதைத் தேன் எடுப்போர் கவனிப்பார்கள்; புகைபோட்டு அவ்வீக்களை விரட்டு வார்கள்; கூட்டை எடுத்துப் பிழிவார்கள்; தேன் எல்லாம் தனியே வந்துவிடும். மெழுகு தனியே

வைக்கப்படும். இதுதான் தேன் எடுத்தல் ஆகும். இவ்வாறே காடுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் ஏராளமான தேன் நமக்குக் கிடைக்கிறது.

*தம்பி :* அண்ணு ! தேனீக்கள், தேன்கூடு, தேன் சேர்த்தல், தேன் எடுத்தல் என்னும் நான்கு செய்திகளை நான் நன்ருய்த் தெரிந்துகொண்டேன். தேனின் உபயோகம் என்ன? அதையும் சொல் அண்ணு !

*அண்ணன் :* சொல்லுகிறேன். தேன் உடலுக்குப் பலமும், நலமும் தரும். அது மருந்துகளிலும் சேர்க்கப் படுகிறது. தேன் கலந்த மருந்துகள் கெடாமல் இருக்கும். பல பழ வகைகளையும் தேனில் பக்குவப் படுத்தி வைப்பார்கள். தேனை அளவாக உட்கொள்ள வேண்டும்.

*தம்பி :* அண்ணு, ஒரு சந்தேகம். ஈக்களைப் புகை போட்டு விரட்டித்தாஞ தேன் எடுக்கவேண்டும். அவற்றை வருத்தாமல் தேன் எடுக்க முடியாதா ?

*அண்ணன் :* தம்பீ, காட்டுத் தேனை எடுப்பதற்கு அதுவே வழி. தேனை எடுப்பதால் அவ்வீக்கள் சாக மாட்டா. காட்டில் பல்லாயிரம் செடிகள் இருக் கின்றன. பல நூறு ஆயிரம் பூக்கள் இருக்கின்றன. வேறு பூக்களில் உள்ள தேனை அவ்வீக்கள் மீண்டும் சேர்க்கும்.

வீடுகளில் தேனீக்களை வளர்க்கலாம். தேனீ வளர்த்தல் என்பது ஒரு குடிசைத் தொழில். ஈக்களை வளர்த்துத் தேனையும் எடுக்கலாம். இதைப்பற்றி இன்னொருநாள் தெரிவிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| தேன் | வெளிப்படும் | இயற்கைப் பொருள் |
| தேனீ | விரட்டி | புத்திக்கூர்மை |
| தேன் கூடு | புகைபோட்டு | சாமர்த்தியம் |
| மெழுகு | தெளிவாக | அமைக்கும் |
| அறை | வருத்தாமல் | பக்குவம் |

## கேள்விகள்

1. தேனின் உபயோகங்களைக் கூறு.

2. தேன்கூடு எவ்வாறு அமைக்கப்படுகிறது?

3. தேனை எடுப்பது எப்படி?

4. தேன் சேர்த்தல், தேன் எடுத்தல்—இவற்றைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

## பயிற்சி

1. **கோடுகளை நிரப்பு:**—தேன் ஒரு ——— பொருள். ——— தேனைச் சேர்க்கின்றன. தேன் ———உண்டாகும். ——— தேன் கூடுகள் அதிகம்.

2. **இலக்கணம்:**—அ, இ, உ, எ, ஒ—இந்த ஐந்து எழுத்துக்களையும் சொல்லிப்பார். இவை குறுகிய ஓசையை உடையவை. ஆகையால் இவை **குற்றெழுத்துக்கள்** எனப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நீண்டு ஒலிப்பதால் **நெட்டெழுத்துக்கள்** எனப்படும்.

ஆடு, ஐந்து, ஒட்டகம், அணில், எலி, உரல், ஊஞ்சல், ஔவையார், இலை, ஓடினன், ஈட்டி — இவற்றில் உள்ள குற்றெழுத்து நெட்டெழுத்துக்களைக் கூறு.



# 10. நல்ல மகன்

தமிழ் நாட்டில் தேசிங்கு ராஜன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் செஞ்சிக்கோட்டை என்னும் ஊரில் இருந்தான். அவன் சிறுவனாக இருக்கும்போது ஒருநாள் தன் தாயாருடன் பேசிக் கொண்டிருந்தான்,

"அம்மா, என் அப்பா எங்கே? நான் எத்தனையோ முறை கேட்டும், சொல்லமாட்டேன் என்கிறாயே! ஒருநாள்கூட அவரை நான் பார்க்கவில்லையே" என்று கேட்டான், தேசிங்கு.

அப்போது இராணியார் "குழந்தாய் வருந்தாதே. இன்று தெரிவிக்கிறேன். நீ என் வயிற்றில் இருந்த போதே டில்லி பாதுஷா உன் தந்தையைச் சிறை செய்துவிட்டார். அச்சிறையிலிருந்து இன்னும் அவர் விடுவிக்கப்படவில்லை" என்று மெலிந்த குரலில் கூறினார்.

"என்ன! சிறைசெய்யப்பட்டாரா? அப்படி அவர் என்ன குற்றம் செய்துவிட்டார்?" என்று ஆத்திரத்துடன் கேட்டான், தேசிங்கு.

"அவர் குற்றம் ஒன்றும் செய்யவில்லை. டில்லி பாதுஷா ஒரு நீலவேணிக் குதிரை வைத்திருக்கிறார். அதை அடக்குவதற்காகப் பல அரசர்களும், மற்றவர்களும் போனார்கள். அப்படிச் சென்றவர்களில் உன் தகப்பனாரும் ஒருவர். அந்தப் பொல்லாக் குதிரையை அடக்க ஒருவராலும் முடியவில்லை. ஆகையால், எல்லோரையும் பாதுஷா சிறையில் வைத்திருக்கிறார்" என்று இராணியார் விவரமாகக் கூறினார்.

"இவ்வளவுதானா அம்மா! எவருக்கும் அடங்காத நீலவேணிக் குதிரையை, நான்போய் அடக்கிச் சவாரி செய்கிறேன். தகப்பனார் டில்லி சிறையில் இருக்க, நான் இங்கே இருப்பதா? அவரை மீட்டு வருவதே என் முதல் கடமை. விடை கொடு, அம்மா! இப்பொழுதே புறப்படுகிறேன்" என்று வீரம் பேசினான் தேசிங்கு. தாயார் மகிழ்ந்து அவனை வாழ்த்தி அனுப்பினார்.

இளங்குமரனான தேசிங்கு நேராக டில்லிக்குச் சென்றான். பாதுஷாவைக் கண்டான், அவரிடம் தன்னுடைய அவாவை உரைத்தான். சிறுவனுடைய பேச்சைக் கேட்டு, பாதுஷா வியப்படைந்தார். அவனுடைய தைரியத்தைக் காண விரும்பினார். உடனே, நீலவேணிக் குதிரையை வரவழைத்து நிறுத்தினார். சிறுவனுடைய தீரத்தைப் பார்க்கப் பலர் கூட்டமாகத் திரண்டார்கள்.

தேசிங்கு ஒரே பாய்ச்சலாகக் குதிரையின்மீது ஏறினான். அவ்வளவுதான். சிறுவனை சுமந்து கொண்டு அக்குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடிற்று "ஐயோ சிறுவன் என்ன ஆவானோ" என்று எல்லோரும் கலங்கினார்கள். அரை மணி

நேரம் ஆயிற்று. நீலவேணியுடன் தேசிங்கு திரும்பி வந்து நின்றான். குதிரை களைத்துப்போய் மிகச் சாதுவாய் நின்றது. அரசகுமாரன் அதைத் தட்டிக் கொடுத்தான். பிறகு கீழே இறங்கிவந்து பாதுஷா வைச் சலாம் செய்து வணங்கினான்.

'அச்சா தேசிங்கு' என்றார் பாதுஷா. அவர் தேசிங்கினுடைய தகப்பனாராகிய தரணிசிங்கை உடனே விடுவித்தார்; மற்றவர்களும் விடுவிக்கப்பட்டார்கள். நீலவேணிக் குதிரையை அவனுக்கே பரிசாகக் கொடுத்தார் பாதுஷா. அவனையும் தரணி சிங்கையும் சிறப்புடன் செஞ்சிக்கு அனுப்பினார். கணவனையும், மகனையும் கண்டு இராணியார் அளவிலா ஆனந்தம் கொண்டார். மகனை உச்சி மோந்து வாழ்த்தினார்.

குலத்தின் பெருமையைத் தேசிங்கு காப்பாற்றி னான். அவன் நல்ல மகன் அல்லவா?

| | | |
|---|---|---|
| கோட்டை | சிறை | விடுவிக்கப்படவில்லை |
| விவரமாக | குற்றம் | மெலிந்த குரலில் |
| கடமை | இளங்குமரன் | பொல்லாக் குதிரை |
| தீரம் | பாதுஷா | திரண்டார்கள் |
| அச்சா | வணங்கினான் | பாய்ச்சலாக |
| பரிசு | ஆனந்தம் | உச்சி மோந்து |

### கேள்விகள்

1. *இந்த கதையில் நல்ல மகன் யார்?*
2. *ஏன் அவனை நல்லமகன் என்று சொல்லவேண்டும்?*
3. *தேசிங்கு எதைத் தன் முதல் கடமையாகக் கொண்டான்?*

### பயிற்சி

1. *அவரவர்கள் தத்தம் வேலைகளைச் சரியாகச் செய்யவேண்டியது கடமை. உன் கடமைகள் என்னென்ன?*

2. *வாழ்த்துவார்கள், வணங்குவார்கள் — இச்சொற்களைக் கோடிட்ட இடங்களில் சரியாகச் சேர்த்துப் படி:*

*சிறியவர்கள் பெரியவர்களை ———— . பெரியவர்கள் சிறியவர்களை ———— .*

## 11. தேசிங்குராசனின் திறமை

பாரா சாரியைச் சலாம் வாங்கிப்
பாய்ந் தேறினும்
புலிக்குட்டி போலே பாய்ந்தவனும்
புரவி ஏறினும்
ஏறின வுடனே பாரா சாரி
என்ன செய்யுதுபார்
தடதட என்று தவிக்குது பார்
அந்தக் குதிரை தானும்
கிடகிட என்று கிளம்பிக் குதித்தது
அந்தக் குதிரை தானும்
லகானே இழுத்துக் கையிலே பிடித்தான்
ராஜா தேசிங்கு
ஆகாய மார்க்கம் வந்து பாயுது
அந்த மேகக்குதிரை
சூரியன் போலே துலங்குது பார்
சொர்ண மேகக்குதிரை
மெள்ளச் சிமிட்டா கொடுத்துக் கொண்டு
மெதுவாய் வாரானே
வருகிற பாலனேக் கண்ணுலே கண்டு
மகிழ்ச்சி யடைந்தார்கள்
அந்தச் சமயத்தில் வந்து நிறுத்தினன்
அந்தப் பாலகனும்
பாரா சாரியைக் கொண்டு நிறுத்தினன்
பால சூரியன்போல்.

—*தேசிங்குராசன் கதை*



## 12. சிற்பம்

கருங்கல், மரம் முதலியவற்றில் மனிதர், மிருகம் முதலிய வடிவங்களைச் செய்யும் வேலை, சிற்பத் தொழில் எனப்படும். சிற்பவேலை செய்கிறவர்களுக்குச் சிற்பிகள் என்று பெயர். நம்முடைய தேசம் சிற்ப வேலைக்குப் பெயர்போனது. சிற்ப வேலையின் அருமையைப் பெரும்பாலும் கோயில்களில் காணலாம்.

கோயில்களில் பெரும்பாலும் முன்னே கோபுரம் இருக்கும். கோபுர வேலை எவ்வளவு அருமையானது! கோபுர வாயில் உயரமாகவும், அகலமாகவும், பெரியதாகவும் இருக்கும். கோபுரத்தின் நாற்புறங்களிலும் பதுமை வேலைகள் செய்யப்பட்டிருக்கும். பல புராணக் கதைகளை அப்பதுமைகளில் காட்டியிருப்பார்கள். தேர்களிலும் மண்டபங்களிலும் அருமையான சிற்ப வேலைகளைப் பார்க்கலாம்.

சிற்பிகள் கல், மண், சுண்ணும்பு, மரம், உலோகம், தந்தம் இவைகளில் தங்கள் கைத்திறமையைக்



காட்டி, பலவகை வடிவங்களை உண்டாக்குகிறார்கள். செம்பு, வெள்ளி, பொன் இவைகளால் விக்கிரகங்களை வார்க்கிறார்கள். கருங்கல்லிலும், மண்ணிலும், சுண்ணும்பிலும் மனிதர் சிலைகள், தெய்வச் சிலைகள், மிருகங்கள், பறவைகள், மற்றும் பற்பல பொருள்களின் உருவங்கள் செய்யப்படுகின்றன.

திருவிழாக்களில் மண், உலோகம், தந்தம் இவைகளால் செய்யப்பட்ட பொம்மைக் கடைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவைகள் வேலைப்பாடும், வர்ணமும் உடையனவாய், பார்ப்பவர் கண்களைப் பறிக்கின்றன அல்லவா? அப்பொம்மைகளும் சிற்ப வேலையால் உண்டானவையே.

சிற்பம் ஒரு நல்ல கைத்தொழில். சிற்பிகள் கைத்திறமை, யோசனை, கணக்கு, நுட்ப அறிவு, பொறுமை ஆகிய இவைகள் உடையவர்கள்.

கோயில்கள் எல்லோருக்கும் பொதுவான இடங்கள். ஆகையால் யாவரும் அங்கு வருவார்கள்; அரிய சிற்பங்களைப் பார்த்து மகிழ்வார்கள். அதனாலேயே சிற்பங்கள் கோயில்களில் காணப்படுகின்றன.

**பொம்மை செய்தல் முதலாகக் கப்பல் கட்டுதல் வரையில் எல்லாம் சிற்பிகளின் திறமையாகும். ஆகையால் சிற்பங்களை அழியாமல் பாதுகாக்கவேண்டும். சிற்பத் தொழிலை வளர்க்கவேண்டும்.**

| | | |
|---|---|---|
| சிற்பம் | உருவம் | தந்தம் |
| சிற்பி | கைத்திறமை | தெய்வச் சிலை |
| அருமை | உலோகம் | வார்க்கிறார் |
| கோபுரம் | வடிவம் | விக்கிரகம் |
| பதுமை | நுட்பம் | வேலைப்பாடு |

## கேள்விகள்

*1. யாருக்கு சிற்பிகள் என்று பெயர்?*

*2. சிற்பிகள் என்னென்ன தன்மைகளை உடையவர்கள்?*

*3. நம் நாட்டில் அரிய சிற்ப வேலைகளை எங்கே காணலாம்?*

## பயிற்சி

*1. சிற்பத் தொழில் ஒரு கைத்தொழில். வேறு சில கைத் தொழில்களைக் கூறு.*

*2. நீ பார்த்துள்ள ஒரு அழகிய சிற்பத்தைப்பற்றி விவரமாகச் சொல்.*

*3. காந்தியின் சிலையை நீ பார்த்திருக்கிறாயா? எங்கே பார்த்திருக்கிறாய்? அச் சிலையைப் பார்க்கும்போதே காந்தியின் குணங்கள் தெரிகின்றனவா? என்னென்ன குணங்கள்?*

# 13. இலக்கணம்—2

மனிதன், முருகன், மாடு, ஆடு, கோழி, காக்கை, மரம், தென்னை, செடி, மீன், விசிறி, பை, வலை, குடம், பம்பரம், புத்தகம், பெஞ்சு, நாற்காலி, ஈ, முட்டை—இவைகள் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் சொற்கள் ஆகும். இவ்வாறு பொருள்களின் பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச் சொற்கள் எனப்படும்.

கழுதை கத்துகிறது. ஆடு நிற்கிறது.—இவைகளில் 'கழுதை' என்பது பெயர்ச்சொல். 'கத்துகிறது' என்பது அதன் செயலைக் குறிக்கிறது. 'ஆடு' என்பது பெயர்ச்சொல். 'நிற்கிறது' என்பது அதன் செயலைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். 'கத்துகிறது' 'நிற்கிறது' என்பவை வினைச் சொற்கள் எனப்படும். வினை = செயல்.

### பயிற்சி

*1. பதுமை, கல், மண், தேர், சிற்பி, காணலாம், இருக்கும், அனுப்பினர், தேசிங்கு, அம்மா, நிற்கிறது, போ — இவைகளில் எவை பெயர்ச் சொற்கள்? எவை வினைச் சொற்கள்?*

*2. ஏற்ற பெயர்ச் சொல்லை அமைத்துப்படி :—*

*———— ஓடுகிறது. ———— சொன்னான். ———— பார்.*

*3. ஏற்ற வினைச்சொல்லைச் சேர்த்துப்படி :—*

*தேசிங்கு பாதுஷாவை ————. சிற்பி கோபுரம் ————. நான் பாடம் ————.*



## 14. சுகவழி

" கந்தா! நீ அழுக்குச் சட்டையை அணிந்து கொண்டு இருக்கிருயே! உனக்குச் சுத்தமான சட்டை இல்லேயா? வேறு சட்டையை எடுத்துப் போட்டுக் கொள்!" என்ருர் தந்தை.

"வேறு சட்டை இல்லே, அப்பா! இன்னும் வண்ணுன் கொண்டுவரவில்லே. நான்கு நாட்களாய் இந்தச் சட்டையைத்தான் போட்டுக்கொண்டிருக்கிறேன்" என்ருன் கந்தன்.

*தந்தை :* வேறு சட்டை இல்லேயென்ருல், இச் சட்டையைத் தோய்த்து உலர்த்தி அணியவேண்டும். அழுக்குச் சட்டையை அணியக்கூடாது.

*கந்தன் :* ஏன், அப்பா?

*தந்தை :* அழுக்குச் சட்டையில் நமது உடம்பில் உண்டான வியர்வை பட்டு அழுக்குப் படிந்திருக்கும்.

அந்த அழுக்கோடு அணிந்துகொண்டால் நமது உடல் நலம் கெடும்.

*கந்தன்* : எப்படிக் கெடும் ?

*தந்தை* : நமது உடம்பின் உள்ளிருக்கும் கெட்ட நீர் மயிர்க்கால் வழியாய் வியர்வையாக வெளிவரும். காற்றில் நீர் உலர்ந்ததும் வியர்வையிலுள்ள அழுக்கு உடம்பில் படிந்திருக்கும். நாம் உடம்பு குளிக்கும் பொழுது இந்த அழுக்கு நீங்கி மயிர்க்கால் வழி சுத்த மடையும். அதனுல் வியர்வை வெளிப்படுவதற்குத் தடையில்லாமல் வழி ஏற்படுகிறது. உடல் நலத்திற்கு வியர்வை நீர் வெளியேற வேண்டியது அவசியம். ஏனென்ருல், உடம்பினுள் இருக்கும் கழிவாகிய அழுக்கு வெளிவரவேண்டுமல்லவா ? அழுக்குப் படிந்த சட்டையைப் போட்டுக்கொண்டால், சட்டையிலுள்ள அழுக்கு உடம்பில் பட்டு மயிர்க்கால் வழியை அடைத்துக்கொள்ளும். அதனுல் உடம்பினுள் இருக்கும் கழிவுநீர் வெளிவர முடியாமற்போய், உடம்புக்கு நோய் ஏற்படும்.

*கந்தன்* : அப்படியானுல், நாம் நாள்தோறும் உடம்பு குளிக்கவேண்டியது அவசியமல்லவா ?

*தந்தை* : ஆம், குளித்தால்தான் உடம்பிலுள்ள அழுக்கெல்லாம் நீங்கி உடம்பு ஆரோக்கியமாய் இருக்கும். "கூழானுலும் குளித்துக் குடி" என்றும், "கந்தையானுலும் கசக்கிக் கட்டு" என்றும் பெரியோர்கள் சொல்வது இதற்காகத்தான்.

*கந்தன்* : இப் பழமொழிகளே எங்கள் ஆசிரியர் கூடச் சொன்னுர், அப்பா ! 'உணவு சாப்பிடுவதில் ஒழுங்கு வேண்டும். இல்லாவிட்டால் உடம்புக்கு நோய் வரும்' என்றுகூடச் சொன்னுர்.

*தந்தை :* ஆம், உணவில் ஒழுங்கு வேண்டும். அளவுக்கு மிஞ்சி உண்ணக்கூடாது. "மீதூண் விரும்பேல்," "அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு" என்று நீ படித்திருக்கிருயல்லவா? வேளை நேரமின்றியும் உண்ணக்கூடாது. குறித்த நேரத்தில் உண்ண வேண்டும். "பாலோடாயினும் வேளையறிந்து உண்" என்றும் நீ படித்திருப்பாய். அளவுக்கு மிஞ்சி உண்பவர்களும், கண்டகண்ட நேரத்தில் உண்பவர்களும், உணவு சீரணம் ஆகாமல் நோய் ஏற்பட்டு வருந்துவார்கள்.

*கந்தன் :* 'அளவாக உண்ணவேண்டும்; ஒழுங்கான நேரத்தில் உண்ணவேண்டும்' என்று தெரிந்துகொண்டேன். இன்னும் உணவு சம்பந்தமாய் அறிந்துகொள்ளவேண்டியது என்ன அப்பா?

*தந்தை :* நல்ல உணவையே உண்ணவேண்டும். அழுகின பழங்கள், ஈ மொய்த்த தின்பண்டங்கள் முதலியவற்றையெல்லாம் உண்ணக்கூடாது. பசித்த பிறகு புசிக்கவேண்டும். இன்னும் சுகமாய் இருப்பதற்குச் சில முறைகளை அறிந்து நடக்கவேண்டும்.

*கந்தன் :* அவை என்ன, அப்பா?

*தந்தை :* நாம் நல்ல காற்றை சுவாசிக்க வேண்டும்; மாலை வேளைகளில் ஓடி விளையாட வேண்டும்; நமது இருப்பிடத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும்; சோம்பலை நீக்கிச் சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும். உழைப்பு, தூக்கம், விளையாட்டு இவைகள் ஒழுங்காகவும் அளவாகவும் இருக்கப் பழக வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் உடல் நோயின்றிச் சுகமாய் வாழலாம்

*கந்தன்:* அப்பா, இன்று சுகவழிகளைப்பற்றித் தெரிந்துகொண்டேன். இனி இவ்வழிகளைப் பின்பற்றி நடக்க முயல்வேன். சட்டையைத் தோய்த்து உலர்த்திப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போகிறேன்.

*தந்தை:* சரி, போய் வா.

| | | |
|---|---|---|
| அழுக்கு | கெட்டநீர் | கூழ் |
| சுத்தம் | மயிர்க்கால் | கந்தை |
| தோய்த்து | தடையில்லாமல் | கசக்கி |
| உலர்த்தி | கழிவுநீர் | ஒழுங்கு |
| வியர்வை | ஆரோக்கியம் | நஞ்சு |
| நோய் | சம்பந்தமாய் | அமிர்தம் |
| சுகம் | அழுகின பழம் | வேளை |

### கேள்விகள்

1. *தந்தை கூறிய சுகவழிகள் யாவை?*
2. *அழுக்குப் படிந்த சட்டையை ஏன் அணியக்கூடாது?*
3. *உணவு உண்பதில் அறியவேண்டியவை என்ன?*
4. *சுகாதாரப் பழமொழிகள் எவை?*

### பயிற்சி

*மயிர்க்கால், தோய்த்து, ஈ மொய்த்த, மாலைவேளை, சுகம்— இச்சொற்கள், தொடர்கள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.*

**மாதிரி:**—*மயிர்க்கால் வழியாக வியர்வை நீர் வெளிவருகிறது. நாம் நாள்தோறும் ஆடையைத்* **தோய்த்து** *உடுத்த வேண்டும்.*

### இலக்கணம்

**ஏற்ற பெயர்ச்சொற்களைச் சேர்த்துப் படி:—**

*நல்ல ——— சுவாசிக்கவேண்டும்.*

*நல்ல ——— உண்ணவேண்டும்.*

## 15. விடாமுயற்சி வெற்றி தரும்

மருதநாடு என்பது ஒரு சிறிய நாடு. இந்நாட்டு அரசன் மருதப்பன் என்பவன். இவன் அறிவிலும் ஆண்மையிலும் சிறந்தவன். இவன் தன் நாட்டை நீதியுடன் அரசாண்டான்; குடிமக்களை அன்புடன் பாதுகாத்தான்; அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தான். ஆகையால் குடிமக்கள் மருதப்பனிடம் பேரன்புகொண்டிருந்தார்கள்.

மருதப்பன் மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தான். ஆயினும், இவனுக்கு மனத்தில் ஒரு குறை இருந்து வந்தது. தன் நாடு சுதந்தரம் இல்லாமல் இருக்கிறதே என்பதுதான் இவன் மனக்குறை. 'நம் நாடு எவ்வளவு சிறப்புடையதாய் இருந்தாலும் அடிமை நாடு தானே! அடிமை நாட்டில் இன்பம் ஏது? அடிமை நாட்டு அரசனுக்குப் பெருமை ஏது?' என்று இவன் பலமுறை எண்ணியெண்ணிப் பெருமூச்சுவிட்டான். தன் நாட்டு அடிமைத்தனத்தைப் போக்கவேண்டு மென்று முயற்சி செய்து வந்தான்.

குறிஞ்சிநாடு என்பது மருதநாட்டுக்கு அருகில் உள்ள ஒரு பெரிய நாடு. அந்நாட்டு அரசன் குமரப்பன் என்பவன். அவன் படைபலம் உள்ளவன். ஆகையால், அவன் மருதநாட்டை வென்று அடிமைப்படுத்தினான். முடிவில் குமரப்பன், மருதநாட்டை மருதப்பனிடமே விட்டு, ஆண்டுதோறும் கப்பம் கட்டவேண்டுமென்று திட்டம் செய்தான். ஆகவே, மருதநாடு குறிஞ்சி நாட்டுக்கு உட்பட்டிருந்தது; மருதப்பன், குமரப்ப னுக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டி வந்தான். இந்த இழிவைத் தான் போக்கவேண்டுமென்று மருதப்பன் ஆசைகொண்டான்.

மருதப்பன் பலநாள் முயன்று படைகளைத் திரட்டினன்; போதுமான படைபலம் ஏற்பட்டதும் குறிஞ்சி நாட்டுக்குக் கப்பம் கட்ட மறுத்தான். இதனல் சண்டை மூண்டது. குறிஞ்சிநாட்டுப் படை வீரர்கள் திரண்டு வந்தார்கள்; மருதநாட்டை வளைத்துக்கொண்டார்கள். மருதநாட்டு படை வீரர் கள் அவர்களை எதிர்த்தார்கள். போர் கடுமையாக நடந்தது. முடிவில் மருதப்பன் தோல்வியடைந்தான். படைபலம் அதிகமுள்ள குமரப்பனை வெல்ல முடிய வில்லை.

மருதப்பன் இதனல் மனச்சோர்வு அடையவில்லை. படைவீரர்களுக்கு ஊக்கமூட்டி இரண்டாம் முறை போர் செய்தான். ஆனல் இரண்டாம் முறையும் தோல்வியே அடைந்தான். தோல்வியைக் கண்டு மருதப்பன் மனங் களைக்கவில்லை. விடாமுயற்சியுடன் மூன்ரும் முறையும் போர்செய்தான். இதிலும் தோல்வி தான் ஏற்பட்டது. இவ்வாறு மருதப்பன் ஆறுமுறை முயன்றும் வெற்றி ஏற்படவில்லை.

ஆறுமுறை முயன்றும் தோல்வியே ஏற்பட்டதால், மருதப்பன் மனம் சலித்தான். 'இனி, போர் வேண்டாம்; நாடும் வேண்டாம்' என்று வெறுப்படைந்தான். ஒருநாள் இரவு எவரும் அறியாமல் நாட்டைவிட்டுப் புறப்பட்டான்; காட்டையடைந்தான். அங்கு ஓர் மலைக்குகையில் போய் உட்கார்ந்தான். அப்பொழுது அவனுடைய உடம்பு களைத்திருந்தது; மனமும் களைத் திருந்தது.

களைத்திருந்த மருதப்பன், அங்கு ஒரு காட்சி யைக் கண்டான். ஒரு சிலந்திப் பூச்சி வலைகட்ட முயன்றது. அதற்காக, அது குகை வாயிலின் மேற் புறத்தையடைய ஏறியது. ஆனல், சிறிது தூரம்



ஏறியதும் கீழே விழுந்தது; மறுமுறையும் ஏறிக் கீழே விழுந்தது; மூன்ரும் முறையும் ஏறி விழுந்தது. இவ்வாறு ஆறு முறை ஏறி ஏறிக் கீழே விழுந்தது.

இக்காட்சி, மருதப்பனுக்கு ஆச்சரியமாயிருந்தது. களைத்திருந்த அவன் மனத்தில் ஊக்கம் பிறந்தது. ஏழாம் முறையாவது சிலந்தி மேலே ஏறிவிடுமா என்பதைப் பார்க்க அவன் ஆவல்கொண்டான். ஆகையால், நிமிர்ந்து உட்கார்ந்தான்.

சிலந்தி, ஆறு முறை கீழே விழுந்தும் சலிப்படையவில்லை; ஏழாம் முறையும் மேலே ஏறத் தொடங்கியது; இம்முறை கீழே விழாமல் குகை வாயிலின் மேலிடத்தை அடைந்துவிட்டது.

இதைக் கண்டதும் மருதப்பன் துள்ளி எழுந்தான். 'சிறு பிராணி சலிப்படையாமல் விடாமுயற்சியுடன் முயன்று வெற்றிபெற்றுவிட்டது. நான் சலிப்படைந் தது தவறு. நானும் முயன்று வெற்றியடைவேன்'

என்று எண்ணினன். உடனே ஊக்கத்துடன் அங்கிருந்து புறப்பட்டான். மருதப்பன் தன் நாட்டிற்கு வந்தான்; படைவீரர்களைத் திரட்டினன். மிகுந்த ஊக்கத்தோடு ஏழாம் முறை போர் செய்தான். முயற்சி வீண்போகவில்லை. மருதப்பன் வெற்றியடைந்தான்; மனங்களித்தான்.

"விடாமுயற்சி வெற்றி தரும்" என்பது இக்கதையால் தெரிகிறதல்லவா?

| | | |
|---|---|---|
| மருதநாடு | கப்பம் | மனச்சோர்வு |
| ஆண்மை | திட்டம் | விடாமுயற்சி |
| குடிமக்கள் | வெற்றி | மனஞ்சலித்தான் |
| சுதந்தரம் | தோல்வி | சிலந்திப்பூச்சி |
| அடிமை | காட்சி | சிறுபிராணி |
| குறிஞ்சிநாடு | ஆச்சரியம் | ஆண்டுதோறும் |
| படைபலம் | ஊக்கம் | பேரன்பு |
| படைவீரர் | தவறு | அடிமை நாடு |

## கேள்விகள்

1. *மருதப்பனின் மனக்குறை என்ன?*
2. *மருதப்பன் காட்டுக்கு ஓடியது ஏன்?*
3. *மலைக் குகையில் மருதப்பன் கண்ட காட்சியைச் சொல்?*
4. *மருதப்பன் எவ்வாறு வெற்றியடைந்தான்?*
5. *இக்கதையால் தெரியும் நீதி என்ன?*

## பயிற்சி

1. *அடிமை, வெற்றி, தோல்வி, காட்சி — இச்சொற்களை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.*

2. *இக்கதையைச் சுருக்கிச் சொல்.*

## எதிர்ச்சொற்கள்

*வெற்றி × தோல்வி* *சிறிய × பெரிய*

**எதிர்ச்சொற்கள் சொல்:—**

*ஆண்மை, ஊக்கம், தவறு, இழிவு.*



## 16. நக்ஷத்திரம்

இரவில் ஆகாயத்தை உற்றுப் பாருங்கள். ஆகாய வீதியில் சிறு சிறு புள்ளிகள்போல் 'பளிச் பளிச்' என்று ஒளியுடன் மின்னுகின்றன அல்லவா ? அவை கள் நக்ஷத்திரங்கள் எனப்படும். ஆகாயத்தில் மின்னு வதால் அவற்றிற்கு 'விண் மீன்' என்ற பெயரும் ஏற் பட்டது. விண் என்ருல் ஆகாயம். இதை வானம் என்றும் சொல்லலாம்.

வானத்தில் உள்ள மீன்களை நீங்கள் பார்த்திருக் கிறீர்கள் அல்லவா ? அவற்றை உங்களால் எண்ணிக் கூற முடியுமா ? முடியாது. அவை எத்தனை கோடியோ ! எவர் சொல்ல முடியும் ?

நக்ஷத்திரங்கள், மிகப் பெரிய பிரகாசமான உருண்டைகள். அவை வானத்தில் கணக்கிட முடி யாத நீண்ட தூரத்தில் இருக்கின்றன. ஆகையால், அவைகள் சிறிய புள்ளிகள்போல் நமக்குத் தெரி கின்றன. நம் முன்னோர்கள் வான நூல் நன்ருக

அறிந்தவர்கள். நக்ஷத்திரங்கள் மட்டுமல்ல, சூரியன், சந்திரன் முதலிய எல்லாக் கோள்களைப்பற்றியும் அவைகள் நகரும் கணக்கைப்பற்றியும், அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

முற்காலத்தில் கடிகாரம் கிடையாது. ஆகையால், நமது முன்னோர்கள் நக்ஷத்திரங்களைக்கொண்டே நாழிகையை அறிந்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நக்ஷத்திரமும் தோன்றும் நேரத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள். ஆகையால் நாழிகையை அறிய முடிந்தது.

ஆகாயத்தில் எண்ணிறந்த விண் மீன்கள் இருக்கின்றன. என்றாலும், அவற்றில் இருபத்தேழு நக்ஷத்திரங்களைப்பற்றி நாம் அறியவேண்டும். அவை ஒரு ஒழுங்கு முறையில் வானத்தில் தோன்றிச் சஞ்சரிக்கும். அவைகளுக்குள்ள அடையாளங்களால் அந்நக்ஷத்திரங்களை நாம் அறியலாம். ஒவ்வொரு நாளும் ஒருவகை நக்ஷத்திரம் அல்லது ஒருவகை நக்ஷத்திரக் கூட்டம் உதயமாகும். இருபத்தேழு நாட்கள் முடிந்தால் அவற்றிற்கு ஒருமுறை முடிவாகும். இந்த இருபத்தேழு நக்ஷத்திரங்களின் பெயர்களை நீங்கள் அறியவேண்டும். அவைகளாவன :

| | | |
|---|---|---|
| அசுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

| | | |
|---|---|---|
| ஆகாயம் | விண்மீன் | புள்ளி |
| வானம் | ஒழுங்குமுறை | கோடி |
| மின்னுகின்றன | அடையாளம் | பிரகாசமான |
| சஞ்சரிக்கும் | உதயம் | நாழிகை |
| நக்ஷத்திரம் | முன்னோர் | கோள்கள் |

## கேள்விகள்

1. எவற்றிற்கு விண்மீன்கள் என்று பெயர்?
2. மீன் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
3. 27 நக்ஷத்திரங்களின் பெயர்களைச் சொல்லு.

## பயிற்சி

I. கோடுள்ள இடங்களில் பொருத்தமான சொல்லை எடுத்து எழுது :—

1. —— நக்ஷத்திரத்தைப் பார்த்திருக்கிறேன்.
2. —— சந்திரனைப் பார்த்திருக்கிறாய்.
3. —— சூரியனைப் பார்த்திருக்கிறான்.

**அவன் — நீ — நான்**

II. ஒரு சொல்லுக்கு இரு பொருள் :

1. **கோடி** :—கோபாலனிடம் கோடி ரூபாய் இருக்கிறது. இதில், கோடி என்பது ஒரு எண். நூறு லக்ஷம் ஒரு கோடி.

தெருவின் கோடியில் எங்கள் வீடு இருக்கிறது. இதில், கோடி என்பது கடைசி.

2. இதுபோல், **மீன்** என்ற சொல்லை இரண்டு பொருளில் எழுது.



## 17. காய்கறித் தோட்டம்

(பள்ளிக்கூடத்தில் படித்த ஒருவர் சொல்லுகிருர்)

எங்கள் வீட்டில் ஒரு சிறு தோட்டம் உண்டு. அது காய்கறித் தோட்டம். அது எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் இருக்கிறது. எங்கள் கொல்லை ஒரு பரந்த இடம். அது ஏன் வீணுக வேண்டும்? காற்ருேட்டத்திற்கு ஒரு பகுதியை விட்டிருக்கிருேம். ஒரு பகுதியில் காய்கறித் தோட்டம் போட்டிருக்கிருேம்.

எங்கள் வீட்டில் உள்ளவர்களே அதற்குத் தோட்டக்காரர்கள். அப்பா, அம்மா, அண்ணன், அக்காள், நான் முதலிய எல்லோரும் அதைக் கவனிப்போம். ஒருநாள் எங்கள் தோட்டத்தின் ஒரு பகுதிக்கு வேலி கட்டினுேம். அப்பகுதியில் வரிசையாகப் பல பாத்திகள் ஏற்படுத்தினுேம். நீர் பாய்வதற்குச் சிறு வாய்க்கால்கள் வெட்டினுேம்.

மண்ணைக் கொத்திக் கல்லைக் களைறியெடுத்துப் புழுதி ஆக்கினுேம். ஆடிப் பட்டத்தில் விதைகளை

விதைத்தோம். கத்திரிச் செடி, வெண்டைச் செடி, பறங்கிக் கொடி, பூசணிக் கொடி, பாகற் கொடி, புடலங்கொடி, கீரை வகைகள், வெங்காயம், முள்ளங்கி முதலிய கிழங்கு வகைகள் எல்லாம் நாங்கள் பயிர் செய்கிறோம். நீர் பாய்ச்சவேண்டிய வேளையில் நீர் பாய்ச்சுவோம்; தக்க எருவை இடுவோம்; கொடிகளுக்குப் பந்தல் அமைப்போம்; பயிர்களைத் தக்கபடி பாதுகாப்போம்.

ஓய்வு நேரத்தில் இவைகள் எங்களுக்கு இன்பமான வேலை. இதனால் வீட்டிற்குக் காய் கிடைக்கிறது; அதிகமான காய்களை விலைக்கும் விற்கிறோம். தோட்டத்தில் வேலை செய்வது எங்களுக்கு உற்சாகமாகவும் இருக்கிறது.

நான் படித்த பள்ளிக்கூடத்திலும் ஒரு சிறு தோட்டம் இருந்தது. அதிலும் காய் வகைகள், பூ வகைகள் முதலியன பயிர் செய்யப்பட்டன. அதில் ஏற்பட்ட பழக்கத்தால்தான் எனக்குத் தோட்ட வேலையில் ஆசையேற்பட்டது. இப்போது வீட்டுத் தோட்டத்தை நானும் மற்றவர்களும் நன்றாகக் கவனிக்கிறோம்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறு தோட்டம் இருக்க வேண்டும். அதில் நாம் காய்கறிகளைப் பயிர் செய்யலாம். அதனால் காய்கறிப் பஞ்சம் ஏற்படாது. புதிய காய்கறிகளை சமைத்து உண்ணலாம்.

காய்கறித் தோட்டத்தின் பயனைப் பார்த்தீர்களா? பயிர் செய்வதால் ஊக்கம் ஏற்படுகிறது; சிறந்த தேகப் பயிற்சி ஏற்படுகிறது; செடிகொடிகளின் நன்மையை அறிகிறோம். உங்கள் வீட்டில் காய்கறித் தோட்டம் ஏற்படுத்தியிருக்கிறீர்களா?

| | | |
|---|---|---|
| புறம் | பாத்தி | உண்ணலாம் |
| கொல்லை | புழுதி | பாதுகாப்போம் |
| பகுதி | எரு | உற்சாகமாக |
| ஓய்வு | தன்மை | ஊக்கம் |
| வாய்க்கால் | தோட்டம் | தோட்டக்காரர் |

## கேள்விகள்

1. வீட்டுத் தோட்டத்திற்குத் தோட்டக்காரர் யார்?

2. பள்ளிக்கூடத் தோட்டத்தில் என்னென்ன வகைகள் பயிர் செய்யப்படும்?

3. தோட்டம் போட வேண்டுமானால் முதலில் என்னென்ன செய்யவேண்டும்?

## பயிற்சி

1. காய் காய்க்கும். பூ பூக்கும். செடி வளரும். விதை விதைப்போம்—இவைகளில் பெயரைக் குறிக்கும் சொற்கள் எவையெவை? வினையைக் குறிக்கும் சொற்கள் எவையெவை?

2. பூ—பூப்பதால் இப் பெயர் ஏற்பட்டது. இதுபோல் மலர், காய், கனி, பழம் என்ற பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் சொல்.

3. கோடுள்ள இடங்களில் ஏற்ற சொல்லை எழுதிப்படி :—

(1) தென்னைமரங்கள் நிறைந்த இடம் தென்னந் ——.

(2) வாழை மரங்கள் நிறைந்த இடம் வாழைத் ——.

(3) மாமரங்கள் நிறைந்த இடம் மாந் ——.

(4) பனைமரங்கள் நிறைந்த இடம் பனந் ——.

## தோட்டம் — தோப்பு — கொல்லை

# 18. கொடிகள்

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
எண்ணி நாங்கள் விதைவிதைத்தோம்
மங்கள மாக முளைத்தெல்லாம்
மகிழ்ச்சி பொங்கக் காய்த்தனவே.

அப்பா புடலை விதைத்திட்டார்
அழகாய் முளைத்துக் கொடிபடர
அப்பா ! பாம்புகள் எனப்பயந்தேன்
அல்ல, காய்கள் என்றுரைத்தார்.

அம்மா விதைத்தது அவரைவிதை
அதுவும் முளைத்துக் கொடிபடர்ந்து
சும்மா யாவரும் பறித்திடவே
சொகுசாய்க் காய்த்துக் குலுங்கியதே.

அண்ணன் விதைத்த சுரையின் விதை
அடுக்காய் முளைத்துக் கொடியேறி
எண்ண முடியாக் காய்காய்த்து
எங்கும் தொங்கிய காட்சியென்ன !

பீர்க்கன் விதையை நான்விதைத்தேன்
பெரிய இலையுடன் கொடிசென்று
பார்க்கத் தங்கப் பூப்பூத்துப்
பறித்துக் களிக்கக் காய்த்ததுவே.

—தி. சி. கு.

### கேள்விகள்

1. *புடலங்காய் என்ன நிறம்? அது எவ்வாறு காய்க்கும்?*
2. *பந்தலில் படரும் கொடிகள் எவை?*
3. *தரையில் படரும் கொடிகள் எவை?*

---

# 19. மதுரை

மதுரை ஒரு பெரிய நகரம். இது தமிழ்நாட்டின் நடுவில் அமைந்திருக்கிறது. முன் காலத்தில் இது பாண்டிய நாட்டிற்குத் தலைநகராய் விளங்கியது. தமிழை வளர்த்தவர்கள் பாண்டிய அரசர்கள். பெரும் புலவர்கள் பலர் மதுரையில் வசித்தார்கள். தமிழ்ச் சங்கமும் மதுரையில் நடந்து வந்தது.

பிற்காலத்திலும் மதுரைமாநகரம் ஒரு முக்கிய பட்டணமே ஆகும். நாயக மன்னர்கள் மதுரையில் ஆண்டார்கள். அவர்கள் காலத்தில் அது நன்றாக முன்னேற்றம் அடைந்தது. "திருமலை நாயகர் மஹால்" நாயகர் ஆட்சியில் கட்டப்பட்டது; அது ஒரு சிறந்த அரண்மனை. திருமலை நாயகர் என்ற மன்னரால் அது கட்டப்பட்டது. மதுரைக்குச் செல்பவர்களுக்கு அம் மஹால் ஒரு சிறந்த காட்சி ஆகும்.



திருமலை நாயகர் மஹால்

இக்காலத்திலும், இம்மாகாணத்திலுள்ள பெரிய நகரங்களுள் மதுரை ஒன்று. இது ஜில்லாவின் தலைநகரமும் ஆகும். தென்னிந்திய இருப்புப் பாதையில் இது ஒரு முக்கிய சந்திப்பு ஆகும். நெசவிற்கும், வர்த்தகத்திற்கும் மதுரை ஒரு பெயர் பெற்ற இடம். கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும், பல ஆரம்பப் பாடசாலைகளும் மதுரையில் நடைபெறுகின்றன. ஜனத்தொகையிலும், நிலப் பரப்பிலும் மதுரை மிகப் பெரிய நகரமாகும்.

மதுரையின் அமைப்பு மிக அழகானது. வைகை யாறு மதுரையின் அருகில் ஓடுகிறது. ஊரின் நடுவே சோமசுந்தரர் ஆலயம் அமைந்திருக்கிறது. அக் கோயில் மிகப் பழமையானது; சிற்ப வேலைகள் அமைந்தது; மிகவும் பெரியது; சுகாதாரமுறையில் கட்டப்பெற்றது; பொய்கையும், தோப்பும், வெட்ட வெளியும், உயர்ந்த கட்டிடங்களும் அமைந்தது.

கோயிலைச் சுற்றி நாற்புறமும் அகன்ற பல வீதி கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் மாடமாளிகை கள் உயர்ந்து விளங்கும். பெரிய கடைத்தெருக்கள் பார்க்க அழகாய் இருக்கும்.

மதுரைமாநகரம் முற்காலத்தைவிட இக்காலத்தில் மிகவும் பெரிதாக விளங்குகிறது. இந்துக்கள், இஸ் லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய மும்மதத்தினர்களும் அங்கு வசிக்கிருர்கள். பற்பல இந்துக் கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் எல்லாம் மதுரையில் உண்டு.

147808

மதுரையிலிருந்து நான்கு பக்கங்களிலும் சாலை கள் பிரிகின்றன. மோட்டார் போக்குவரவிற்கு மதுரை ஒரு முக்கிய ஊர். ஏராளமான பஸ்களும், மோட்டார் வண்டிகளும் மதுரையில் இடைவிடாமல் ஓடும்.

செல்வர்களும், முதலாளிகளும், தொழிலாளி களும், கூலியாட்களும் மற்றவர்களும் நிறைந்து மதுரை செழிப்பாக விளங்குகிறது. இத்தகைய சிறந்த நகரத்தை நீங்கள் எல்லோரும் ஒருமுறை கண்டு களிக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| மாநகரம் | சங்கம் | மாகாணம் |
| தலைநகரம் | மஹால் | இருப்புப்பாதை |
| முக்கிய பட்டணம் | அரண்மனை | கல்லூரி |
| இத்தகைய | சந்திப்பு | ஜனத்தொகை |
| பரப்பு | ஆலயம் | பழமையானது |
| மதம் | மாளிகை | நாற்புறம் |
| மாதாகோவில் | மசூதி | போக்குவரவு |
| முதலாளி | தொழிலாளி | இடைவிடாமல் |

## கேள்விகள்

*1. மதுரையிலுள்ள ஒரு சிறந்த அரண்மனை எது? அது யாரால் கட்டப்பட்டது?*

*2. மதுரை முற்காலத்தில் எவ்வாறு விளங்கிற்று? இக்காலத்தில் எவ்வாறு விளங்குகிறது?*

*3. எந்தெந்த வகைகளில் மதுரை பெயர்பெற்றது?*

## பயிற்சி

*1. மதுரை ஜில்லாவிற்கு மதுரை முக்கியப் பட்டணம். நீ வசிக்கும் ஜில்லா எது? அதற்கு முக்கியப் பட்டணம் எது?*

*2. மசூதி, மாதாகோவில், கோவில்—இவை உங்கள் ஊரில் இருக்கின்றனவா? இல்லையா?*

*3. இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் இவர்கள் உங்கள் ஊரில் வசிக்கிறார்களா?*

## இலக்கணம்

**ஏற்ற வினைச்சொற்களைச் சேர்த்துப்படி :—**

*நான் மதுரைக்குப் ———— .*

*மதுரையில் ஒரு அரண்மனை ———— .*

*நீ மதுரையைப் ———— .*

# 20. நரியின் தந்திரம்

அடுத்த பக்கத்திலுள்ள படங்களைப் பாருங்கள் !

ஒரு நாள் ஒரு காக்கை தெருப்பக்கம் சென்றது. அங்கே ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்தது. தெருவில் ஒரு பையன் வடையைக் கையில் வைத்துக்கொண்டு இருந்தான். காக்கை சமயம் பார்த்துப் பையன் கையிலிருந்த வடையைப் பிடுங்கிக்கொண்டு பறந்து ஓடிப் போயிற்று. அது ஒரு மரத்தின்மேல் சற்று உட்கார்ந்தது.

அதை ஒரு நரி பார்த்துக்கொண்டே இருந்தது. உடனே காக்கை இருந்த மரத்தின் அருகில் போயிற்று. "காக்கையே, காக்கையே, நீ என் நெடுநாள் நண்பன் அல்லவா ? உன் குரலைக் கேட்டு வெகுநாள் ஆயிற்று. அது எவ்வளவு இனிய குரல் ! உன் பாட்டைக் கேட்க எனக்கு இப்பொழுது வெகு ஆசையாய் இருக்கிறது. ஒரே ஒரு பாட்டுப்பாடுவாயா ?" என்று தந்திரமாகக் கேட்டது.

அந்த மூடக் காகம் நரியின் வஞ்சகப் பேச்சை மெய்யென்று நம்பிற்று. உடனே வாயைத் திறந்து 'கா, கா' என்று கத்தியது. உடனே வடை கீழே விழுந்தது. நரி அவ்வடையைக் கௌவிக்கொண்டு ஓடிப் போய்விட்டது.

நரி ஏன் மரத்தண்டை போயிற்று ? காக்கையின் குரல் இனிமை உடையதா ? நரி ஏன் அதைப் புகழ்ந்தது ? பாட்டைக் கேட்கவா அது விரும்பிற்று ? நரி என்ன எண்ணிற்று ? இவைகளுக்கு நீங்கள் யோசித்து விடை கூறுவீர்களா ?




1. ஒரு பையன் வடையுடன் நிற்கிறான்; காக்கை மரத்தில் உட்கார்ந்து இருக்கிறது.

2. காக்கை வடையைப் பிடுங்கிக்கொண்டு பறந்து போகிறது.

3. நரி காக்கையிடம் பேசுகிறது.

4. நரி காக்கையை ஏமாற்றி வடையைக் கௌவிக்கொண்டு போகிறது.

பிள்ளைகளே, இக்கதையிலிருந்து என்ன நீதி விளங்குகிறது? சில தீயவர்கள் தந்திரமாகவும் இனிமையாகவும் பேசுவார்கள். அப்பேச்சுக்களை நாம் நம்பிவிடக்கூடாது. புதியவர் யாராவது வந்து உங்களிடம் பிரியமாகப் பேசி, தந்திரமாகக் கூப்பிட்டால் அவர்களுடன் நீங்கள் போகக்கூடாது. ஒருவருடைய பேச்சை உடனே நம்பக்கூடாது. அவரையும், அவருடைய பேச்சுக்களையும் நம்பலாமா நம்பக்கூடாதா என்று நன்றாக யோசிக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| கடைவீதி | புகழ்ந்தது | யோசித்து |
| சற்று | தீயவர்கள் | தந்திரமாக |
| மூடக்காகம் | புதியவர்கள் | கௌவிக்கொண்டு |

## கேள்விகள்

1. *நரி காக்கையைப் பார்த்து என்ன சொல்லிற்று?*
2. *காகம் என்ன செய்தது?*
3. *சில தீயவர்கள் என்ன செய்வார்கள்?*

## பயிற்சி

1. வடை—இது ஒரு வடையைக் குறிப்பதால், ஒருமை ஆகும். **ஒன்றைக் குறிப்பது ஒருமை.** வடைகள்—இது பல வடைகளைக் குறிப்பதால் **பன்மை** ஆகும். **பலவற்றைக் குறிப்பது பன்மை.** 'கள்' என்பதைச் சேர்த்தால் ஒருமையானது பன்மையாகும்.

2. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் கூறு:

| ஒருமை | பன்மை |
|---|---|
| நரி | —— |
| —— | காக்கங்கள் |
| மரம் | —— |
| நாள் | —— |
| —— | பிள்ளைகள் |




# 21. தபால்

*தபாற்காரர் :* (வீட்டின் வாயிற்படியில் இருந்து) தபால்! தபால்!

*தாயார் :* (வீட்டின் உள்ளேயிருந்து) கமலம், தபாற்காரர் கூப்பிடுகிறார்; கடிதம் ஏதேனும் வந்திருக்கும், போய் வாங்கிவா.

(கமலம், தாய் சொன்னபடி போய்க் கடிதங்களை வாங்கி வருகிறாள்.)

*கமலம் :* அம்மா, இதோ போய் வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். இரண்டு கடிதங்கள் வந்திருக்கின்றன. ஒன்று அட்டைத் துண்டு; மற்றொன்று உறை. இது ஏன் ஒன்று அட்டையாக இருக்கிறது, மற்றொன்று உறையாக இருக்கிறது?

*தாய் :* விவரமாகச் சொல்கிறேன், கேள்; குறைவான செய்தி, அல்லது முக்கியமில்லாத செய்தியை எழுதுபவர்கள் இந்த அட்டையில் எழுதுவார்கள்.

இந்த அட்டைத் துண்டிற்குக் 'கார்டு' என்று பெயர். இதற்குக் கட்டணம் முக்கால் அணு.

இதன் ஒரு பக்கத்தில் அரசாங்கச் சின்னத்தைப் பார். இதற்குத் தபால் தலை (ஸ்டாம்பு) என்று பெயர். கார்டு யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அவருடைய முகவரியை (விலாசம்) இப்பக்கத்தில் எழுத வேண்டும்.

அதிகமான செய்தி, அல்லது முக்கியமான செய்தியை எழுதுபவர்கள் இந்த உறையில் கடிதம் எழுதிவைத்து அனுப்புவார்கள். இந்த உறைக்குக் 'கவர்' என்று பெயர். இதற்குக் கட்டணம் இரண்டணு. இதிலும் தபால் தலையைப் பார். ஸ்டாம்பு அச்சடித்த உறைகள் தபால் ஆபீசில் கிடைக்கும். தபால் தலையில்லாத வெற்றுறைகளிலும், தபால் தலைகளைத் தனியே வாங்கி ஒட்டலாம். தனியான தபால் தலைகளும் தபாலாபீசுகளில் கிடைக்கும். உறையின் மேற்புறத்தில் முகவரி எழுதவேண்டும். செய்திகள் எழுதிய வேறு காகிதத்தை மடித்து உறையினுள் வைத்து, உறையின் வாயை ஒட்டிவிடவேண்டும்.

*கமலம் :* முகவரியில் என்னென்ன எழுத வேண்டும்?

*தாய் :* இக்கடிதத்தில் உள்ள முகவரியை நீயே வாசித்துப்பார்.

*கமலம் :* பெயர், வீட்டு இலக்கம், தெரு, ஊரின் பெயர், தபால் நிலையம் உள்ள இடம் இவைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

*தாய் :* இவைகள் முகவரி எழுதவேண்டிய முறை. கடிதம் எழுதியுள்ள முறையையும் கவனி.

*கமலம் :* மேலே வலப் பக்கத்தில் ஊரின் பெயரும் தேதியும் ; பிறகு செய்திகள் ; ஆரம்பத்தில் இன்றுருக்கு இன்னூர் வணக்கம் என்பது ; நடுவில் செய்திகள் ; முடிவில் வலப்பக்கத்தில் எழுதியவர் கையொப்பம்—இவைகள் இருக்கின்றன.

*தாய் :* இவைதான் கடிதம் எழுதும்போது கவனிக்கவேண்டியவை.

*கமலம் :* முகவரி எழுதும் முறையையும் கடிதம் எழுதும் முறையையும் தெரிந்துகொண்டேன். ஆனால், ஒரு சந்தேகம். கடிதத்தின் ஆரம்பத்தில் 'வணக்கம்' என்று இருக்கிறதே, யாருக்கு எழுதினாலும் 'வணக்கம்' என்றுதான் எழுதவேண்டுமா ?

*தாய் :* இல்லை, பெரியவர்களுக்குச் சிறியவர்கள் எழுதும்போதுதான் வணக்கம் அல்லது நமஸ்காரம் என்று ஆரம்பிக்கவேண்டும். சிறியவர்களுக்கு பெரியவர்கள் எழுதும்போது ஆசீர்வாதம் அல்லது வாழ்த்து என்று எழுதவேண்டும்.

*கமலம் :* நமக்கு வந்த கடிதத்தில் அனுப்பியவருடைய முகவரியும் இருக்கிறதே, அது எதற்கு ?

*தாய் :* ஒரு ஓரத்தில் அனுப்பியவருடைய விலாசமும் குறிப்பிடுவது நல்லது. விலாசதார் ஒருவேளை இல்லையென்றாலும், தெரியவில்லை என்றாலும் அக்கடிதத்தைத் தபாலாபீசார் அனுப்பியவரிடம் சேர்ப்பிக்க முடியும்.

*கமலம் :* கார்டு, கவர் எழுதவேண்டிய முறைகளை இன்று தெரிந்துகொண்டேன். அவற்றை இனி எழுதிப் பழகவேண்டும்

| | | |
|---|---|---|
| தபாற்காரர் | கார்டு | தபால்தலை |
| கட்டணம் | கவர் | ஸ்டாம்பு |
| தேதி | சின்னம் | முகவரி |
| வணக்கம் | கையொப்பம் | விலாசம் |

## கேள்விகள்

1. கார்டில் எத்தனை பக்கங்கள் உண்டு? எந்தப் பக்கத்தில் முகவரி எழுதவேண்டும்? செய்திகளை எங்கே எழுதவேண்டும்?

2. முகவரியில் என்னென்ன விவரங்கள் எழுதவேண்டும்?

3. கடிதம் எழுதவேண்டிய முறைகளைப்பற்றி இப்போது நீ தெரிந்துகொண்டவைகளைச் சொல்லு.

## பயிற்சி

1. உன்னுடைய வீட்டு விலாசத்தை எழுது.

2. வெளியூரில் உள்ள உன் சொந்தக்காரர் ஒருவருடைய முகவரியை எழுது.

3. ஒரு கார்டு வாங்கி வா. ஒரு கவர் வாங்கி வா. இரண்டு கார்டுகள் வாங்கி வா. மூன்று கவர்கள் வாங்கிவா. இதுபோல், கோடுள்ள இடங்களில் ஒருமை பன்மைச் சொற்களை எழுது :—

(1) தோட்டத்தில் ஒரு —— வளர்கிறது.

(2) எங்கள் வீட்டில் இரண்டு —— இருக்கின்றன.

(3) காட்டில் நான்கு —— மேய்கின்றன.

(4) நமது முகத்தில் இரண்டு —— உள்ளன.

(5) மரத்தின் உச்சியில் ஒரு —— இருக்கிறது.

# 22. நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் என்ற பெயரை நீங்கள் எல்லாரும் அறிவீர்கள். கவிஞர் என்ருல் கவி பாடுவதில் வல்லவர் என்று அர்த்தமாகும். கவி என்பது பாடல் அல்லது பாட்டு என்று பொருள்படும். நாமக்கல் கவிஞர் இயற்றிய பாடல்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இவர் சிறந்த தமிழ்க் கவிஞர். நாமக்கல் இவருடைய சொந்த ஊர். ஆகையால் நாமக்கல் கவிஞர் என்ற சிறப்புப் பெயர் இவருக்கு வழங்குகிறது.



நாமக்கல் கவிஞர், தமிழறிவு நிரம்பப் பெற்றவர்; தேசபக்தியில் சிறந்தவர்; நாட்டிற்கு உழைத்துப் பெயர் பெற்றவர். பொது நலன்களிலேயே இவருக்கு எப்போதும் விருப்பம்; எப்போதும் மலர்ந்த முகமும், இன் சொல்லும் உடையவர்; செருக்கு என்பது சிறிதும் இல்லாதவர். இவர் எல்லாரிடத்திலும் அன்பு உடையவர். எல்லாரும் இவரை விரும்புவார்கள்.

இவருடைய இயற்பெயர் இராமலிங்கம் என்பதாகும். பிற்காலத்தில் இவர் 'இராமலிங்கம் பிள்ளை' என்று மரியாதையாக அழைக்கப்பெற்ருர்.

ஆரம்பத்தில் இவர் சித்திரக் கலையைப் பயின்ருர். பள்ளிப் பருவத்திலேயே இவர் சித்திரங்கள் நன்ருய் வரைவார். சித்திரம் எழுதவேண்டும் என்று இளமையில் ஏற்பட்ட அவாவை இவர்

வளர்த்தார். விடா முயற்சியுடன் பழகி அதில் தேர்ச்சி பெற்றார். செந்தமிழை நன்றாகப் படித்தார். கவிகள் இயற்றும் வல்லமையைப் பெற்றார்.

இப்போது இவர் பல இனிய பாடல்களை இயற்றி இருக்கிறார்; புதிய புதிய பாடல்களை நாடோறும் இயற்றுகிறார். அப்பாடல்களால், மக்களின் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. அப்பாடல்கள் உயர்ந்த கருத்துக்களை உடையவை; இனிய ஓசையும் இசையும் உடையவை; பாடம் செய்வதற்கு எளியவை.

இவருடைய பெருமையையறிந்த அரசாங்கத்தார் அரசவைக் கவிஞர்' என்னும் பதவியை இவருக்கு அளித்தார்கள். இப்பதவியை 'ஆஸ்தான கவி' என்றும் சொல்லுவார்கள். இவர் தம்முடைய கவிகளால் தமிழர் உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறார். நமது கவிஞர் இயற்றிய பாடல்களில் சிலவற்றை இப் புத்தகத்தில் படிப்பீர்கள்.

| | | |
|---|---|---|
| கவிஞர் | சிறப்புப் பெயர் | அரசவைக் கவிஞர் |
| பாடல் | சபை | ஆஸ்தான கவி |
| அவா | இன்சொல் | பொதுநலன் |
| உள்ளம் | செருக்கு | சித்திரக்கலை |
| பதவி | செந்தமிழ் | இயற்பெயர் |

### கேள்விகள்

*1. நாமக்கல் கவிஞர் எவற்றில் சிறந்தவர்?*

*2. இவர் எவ்வாறு பெயர் பெற்றவர்?*

*3. இவர் நமக்கு அளித்துள்ள நன்மை என்ன?*

### பயிற்சி

**கோடுகள் உள்ள இடங்களை நிரப்பு :—**

*அன்புடையவர்களை ———— விரும்புவார்கள்.*

*அன்புடையவர்கள் ———— விரும்புவார்கள்.*

## 23. யாராலே?

1. சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது யாராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவையென்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ!

2. தண்ணீர் விழுந்ததும் விதையின்றி
தரையில் முளைத்திடும் புல் ஏது?
மண்ணிற் போட்டது விதையொன்று
மரம்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவையெல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ!

3. அல்லா என்பார் சிலபேர்கள்
அரன் அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா ‘நிர்வாணம்’
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

—நாமக்கல் கவிஞர்.

# 24. மாணவர் சமூகத்தொண்டு

புதுக்குடி என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அது ஆதாரக் கல்வி கற்பிக்கும் பள்ளிக் கூடம். அப்பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான கைத்தொழில், சுகாதாரம் முதலியவற்றைக் கற்றுக் கொள்ளுகிறார்கள்; பாடம் படிப்பதோடு வேலையும் செய்கிறார்கள்; சமூகத்தொண்டு செய்யவும் பயில் கிறார்கள்.

இவர்கள் அடிக்கடி பக்கத்து ஊர்களுக்குப் போவார்கள். அங்கே வாழும் மனிதர்களுக்குப் பொது நலத் தொண்டு செய்வார்கள்.

இவர்கள் ஒரு நாள் அருகில் இருக்கும் ஒரு சேரிக்குச் சென்றார்கள். ஒவ்வொருவரும் துடைப்பம் பிடித்துச் சேரியைச் சுத்தம் செய்தார்கள். பிறகு, சேரியில் வாழும் மனிதர்களை ஓரிடத்தில் கூடச் செய்தார்கள். "நீங்கள் எல்லோரும் குடியிருக்கும் தெருக்களைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்கள். சுகாதார முறைகளையும் சொன்னார்கள்.

சில மாணவர்கள் பக்கத்தில் உள்ள குளத்திற் குப் போனார்கள். அக்குளத்தில் சிலர் மாடுகளைக் குளிப்பாட்டிக்கொண்டும், சிலர் உடம்பு குளித்துக் கொண்டும், சிலர் துணிகளைத் துவைத்துக்கொண்டும் இருப்பதைப் பார்த்தார்கள். அக்குளத்தின் நீரைக் குடிப்பதற்காகச் சில பெண்கள் குடத்தில் முகர்ந்து கொண்டு இருப்பதையும் கண்டார்கள், அவர்களிடம்,


படம்
ஆடு
பட்டம்
வாசுகி

"குளத்தை அசுத்தம் செய்யக்கூடாது ; குடிக்கும் நீர்க் குளம் தனியே இருக்கவேண்டும்" என்று சொன்ஞர்கள். அசுத்த நீரால் நோய்கள் வரும் என்று தெரிவித்தார்கள்.

சில மாணவர்கள், இரவில் சேரி மக்களுக்கு எழுத்துக் கற்பித்தார்கள் ; சிலர், பயிர்த்தொழில் முறை, ஒற்றுமையின் அவசியம், கல்வியின் சிறப்பு முதலியவற்றை விளக்கிப் பேசிஞர்கள்.

சில மாணவர்கள், முதியவர்களுக்குப் பத்திரிகைகளைப் படித்து ஊர்ச் செய்திகளைத் தெரிவித்தார்கள் ; புத்தகங்களைப் படித்துக் காட்டிஞர்கள்.

இவ்வாறு மாணவர்கள் பலமுறை சமூகத்தொண்டு செய்தார்கள். அதஞல், சேரியில் வாழும் மக்கள் சுகாதாரமாக வாழக் கற்றுக்கொண்டனர் ; கல்வியறிவு பெற்றனர் ; பயிர்த்தொழில் முறைகளை அறிந்தனர். ஊர்ச் செய்திகளை உணர்ந்தனர்.

| | | |
|---|---|---|
| ஆதாரக் கல்வி | துடைப்பம் | சேரி |
| கைத்தொழில் | துப்பரவு | சமூகம் |
| சமூகத் தொண்டு | குளித்தல் | முதியவர் |
| பொதுநலம் | முகந்து | உணர்ந்தனர் |

### கேள்விகள்

*1. ஆதாரக் கல்வி என்பது என்ன ?*

*2. மாணவர்கள் செய்த சமூகத் தொண்டுகள் எவை ?*

*3. ஊரில் வாழ்வோர் தெருக்களை எவ்வாறு வைத்துக் கொள்ளவேண்டும் ?*

*4. குளங்களை எவ்வாறு அசுத்தம் செய்கிருர்கள் ? சுத்தமாக வைத்துக்கொள்ள என்ன செய்யவேண்டும் ?*

## பயிற்சி

I. **கோடுள்ள இடங்களில் ஏற்ற சொல்லை எடுத்து எழுது :—**

1. சிலர் குளங்களில் உடம்பு ———— .
(குளிப்பாட்டினார்கள், குளித்தார்கள்.)

2. ஆசிரியர் மாணவருக்குப் பாடம் ———— .
(கற்பித்தார், கற்றார்.)

3. சேரி மக்கள் சுகாதார முறைகளை ———— .
(அறிவித்தனர், அறிந்தனர்.)

II. **ஒரே அர்த்தமுள்ள பல சொற்கள் :—**

**கண்டார்கள், பார்த்தார்கள்**—இவை இரண்டும் ஒரே அர்த்தமுள்ள சொற்கள் ஆகும். இதுபோல் ஒரே அர்த்தமுள்ள சொற்களைச் சேர்த்து எழுது :

சென்றான், வேகம், சொன்னான், விரைவு, அழைத்தான், கூறினான், அறிந்தான், கூப்பிட்டான், தெரிந்தான், போனான், சந்தேகம், சிவப்பு, ஐயம், செம்மை.

**மாதிரி :** சென்றான்—போனான்.

III. **படப் பயிற்சி :**

1. இப்பாடத்திலுள்ள படங்களைப் பார் !

2. முதல் படத்தில் மாணவர்கள் என்ன செய்கிறார்கள் ?

3. இரண்டாம் படத்தில் மாணவர்கள் என்ன பேசுகிறார்கள் ?

4. மற்ற படங்களில் மாணவர்கள் செய்யும் தொண்டுகள் யாவை ?

5. ஒவ்வொரு படத்திலும் நீ அறிந்ததைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.



## 25. துட்டன் அடைந்த பலன்

ஓர் ஊரில் சிறு பையன் ஒருவன் இருந்தான். அவன் துட்டப் பையன். ஆகையால் அவனை எல்லோரும் துட்டன் என்றே அழைப்பார்கள். எப்போதும் அவன் ஏதாவது குறும்பு செய்துகொண்டே இருப்பான்; தெருவில் நாய் போனால் அதைக் கல்லால் அடிப்பான்! பறவைகளைப் பிடித்துத் துன்புறுத்துவான்; நொண்டி முதலியவர்களை ஏளனம் செய்வான்; யாரையும் வம்பிற்கு இழுப்பான். அவனுடைய தாயார் அவனுக்கு எவ்வளவோ புத்தி மதிகளைச் சொன்னார். அவற்றை அவன் கேட்கவே இல்லை. ‘நீ துட்டன்; கெட்ட பலன் அடைவாய்! பட்ட பிறகே உனக்குப் புத்தி வரும்’ என்று கடைசியாகக் கூறிவிட்டார்.

தாயார் கூறிய நல்ல வார்த்தைகளை அவன் சட்டை செய்யவே இல்லை, நித்தம் ஒரு துட்டத்தனம் செய்து வந்தான். ஒரு நாள் அவன் ஒரு தோட்டத்திற்குச் சென்றான். அங்கே ஒரு பறவைக்கூட்டைக் கண்டான்.

அது தூக்கணங் குருவியின்கூடு. அது மரக்கிளையின் நுனியில் இருந்தது. துட்டன் சும்மா இருப்பானு? மரத்தின் மேலே ஏறினுன். கூடு இருந்த கிளைக்குப் போனுன். கிளை தன்னைத் தாங்குமா என்றுகூட யோசிக்கவில்லை. அவனுடைய கண்களும், நினைப்பும் கூட்டின் மேலேயே இருந்தன. அந்தக் கூட்டைப் பிரிக்க வேண்டும் என்று எண்ணினுன். அப்படி எண்ணிக்கொண்டே கிளையின் ஓரத்தில் காலை வைத்தான். மட மடவென்று சத்தம் கேட்டது அவ்வளவு தான், அவன் நின்றிருந்த கிளையும் ஒடிந்தது; மேலே கை பிடித்திருந்த கிளையும் முறிந்தது.

துட்டன் தொப்பென்று கீழே விழுந்தான், கையிலும், காலிலும் நல்ல அடிபட்டது. உடம்பில் காயமும் ஏற்பட்டது. நல்ல வேளையாய் உயிருக்கு ஆபத்து இல்லை. துட்டன் அடைந்த பலனைப் பார்த்தீர்களா ?

கிளை முறிந்த சத்தம் கேட்டு, தோட்டக்காரன் ஓடி வந்தான். துட்டனைத் திட்டினுன். அவனைத் தூக்கிக் கொண்டு போய் வீட்டில் விட்டான். துட்டனைக் கண்ட தாயார் மிகவும் வருந்தினுள், " நான் அப்போதே சொன்னேனே, என் பேச்சை சட்டை செய்ய வில்லையே ; திக்கற்ற பறவைகளுக்குத் தீங்கு செய்ய எண்ணினுய் ; கடவுள் உனக்குப் புத்தி கற்பித்தார். இனிமேலாவது ஒழுங்காக இருப்பாய் " என்ருர்.

" அம்மா எனக்குப் புத்தி வந்துவிட்டது ; இனி உன் பேச்சைத் தட்டமாட்டேன் ; ஒரு துட்டத் தனமும் செய்யமாட்டேன் " என்ருன், துட்டன்.

**கைகால் வலியும், காயங்களும் ஆற இரண்டு வாரம் ஆயிற்று, அதன் பிறகு அவன் நல்ல பையன் ஆனுன்.**

| | | |
|---|---|---|
| துட்டன் | புத்திமதி | முறிந்தது |
| குறும்பு | நுனியில் | தொப்பென்று |
| வம்பு | தாங்குமா | வருந்திஞன் |
| நித்தம் | நினைப்பு | கற்பித்தார் |
| சட்டை | காயம் | தட்டமாட்டேன் |

## கேள்விகள்

*1. துட்டனுக்கு அவனுடைய தாயார் என்ன புத்திமதிகளைக் கூறிவந்தார் ?*

*2. ஒரு நாள் அவன் என்ன துட்டத்தனம் செய்தான் ?*

*3. அதனுல் அவன் அடைந்த தீங்கு யாது ?*

## பயிற்சி

*1. உடம்பில் சட்டையை அணி. பெரியோர் சொல்லைச் சட்டை செய். யாரையும் அசட்டை செய்யாதே. இம்மாதிரி வேறு வாக்கியங்கள் கூறு.*

*அப்பா எனக்கு ஒரு பட்டுச் ———— .*

*பாடங்களை ———— செய்யாதே.*

*யாரையும் ———— செய்து பேசு.*

*2. குறும்பு செய்வான். தீங்கு அடைவான். குறும்பு செய்யமாட்டான். நன்மை அடைவான்—யார் ? (துட்டன், நல்லவன்).*

# 26. ஆடையும், அணியும்

ஆடையும் அணியும் மனிதர்களுக்கு அழகு செய்வன ஆகும். அவைகள் நாகரிகத்தின் அடையாளமாக உள்ளன. ஆடை அணிகளைப் பார்த்ததும், ஒருவரை நாகரிகம் அறிந்தவர், நாகரிகம் அறியாதவர் என்று சொல்லலாம்.

இவைகளில் ஆடைகள் முதன்மையானவை. மனிதர்களுக்கு ஆடைகள் அவசியம். அணிகள் என்றால் நகைகள். அவைகள் உடலின் அழகை அதிகப்படுத்தும். ஆனால் நம்முடைய முன்னோர்கள் அழகுக்காக மட்டும் அணிகளை அணியவில்லை. உடல் வளர்ச்சி, உடல் நலம் இவைகளைக் கவனித்தே அணிகளை அணிந்தார்கள்.



இளம் குழந்தைகளுக்கு வெள்ளிக் காப்புப் போடுகிறார்கள். அதனால் பாதத்தின் வளர்ச்சி ஒழுங்காக அமையும். பெண்கள் இடுப்பில் ஒட்டியாணம் அணிகிறார்கள். ஆண்கள் இடையில் தளர்ந்த கச்சை அணிகிறார்கள். உடையை நழுவாமல் காப்பதற்கு அவை உதவுகின்றன. இப்படியே ஒவ்வொரு நகைக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு.

'ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்' என்பார்கள். 'இரக்கப்போனாலும் சிறக்கப்போ'

என்பது பழமொழி. இக்காலத்தில் சட்டை இல்லாதவர்களைப் பிறர் சட்டை செய்யமாட்டார்கள். உணவு எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானது ஆடை.




ஊருக்குத் தக்கபடியும் பருவத்திற்குத் தக்கபடியும், தொழிலுக்குத் தக்கபடியும் உடைகளின் வகைகள் மாறுபடும். அவசியமும், சிக்கனமுமான ஆடைகளையே ஒவ்வொருவரும் அணியவேண்டும். ஆடம்பர உடைகளை உடுப்பது வீணுகும். சரிகையும், பட்டும், அதிக விலையுள்ள துணிகளும் அவ்வளவு அவசியமானவை அல்ல.

நமக்கு வேண்டிய ஆடைகளை நமது தேசத்திலேயே தயாரிக்கவேண்டும். நாட்டுப் பருத்தியைக் கொண்டு நம் நாட்டினரால் செய்யப்பட்ட ஆடைகளையே நாம் அணிய வேண்டும். அவை சுதேசித் துணிகள் எனப்படும். சுதேசித் துணிகளில் கதர்த் துணிகள் முதல் வகை. கையிஞலேயே நூல் நூற்று, கைத்தறியில் நெய்யப்பட்டவை அவை. இயந்திரத்தில் நூற்ற நூலைக்கொண்டு கைத்தறியில் நெசவு செய்பவை மற்ளுெரு வகை. அவை கைத்தறித் துணிகள் எனப்படும்.

மில் துணிகள் மற்ளுெரு வகை. அவை நெய்யப்படுவதும் இயந்திரத்தில்; அவற்றின் நூல் நூற்கப்படுவதும் இயந்திரத்தில். மில்களில் ஏராளமான

துணிகள், குறைந்த காலத்தில் தயாராகும். என்ருலும், கைநெசவுத் துணிகள் உடலுக்கு ஆரோக்கியமானவை.

இந்தியாவின் பருத்தியால் இந்தியாவிலேயே நெய்யப்பட்ட ஆடைகளையே நாம் உபயோகிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| ஆடை | இரக்க | நழுவாமல் | கைத்தறி |
| அணி | சிறக்க | சுயமான | இயந்திரம் |
| பொன் | நாகரிகம் | இடை | நெசவு |
| வெள்ளி | வளர்ச்சி | பருவம் | மில் துணி |
| சுதேசி | சிக்கனம் | அவசியம் | கதர் |

### கேள்விகள்

1. *ஆடைகளை அணிவதில் கவனிக்கப்படும் விதிகள் யாவை?*

2. *அணிகளால் ஏற்படும் பயன் என்ன?*

3. *கதர்த்துணி, கைநெசவுத் துணி, மில் துணி—இவைகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன?*

### பயிற்சி

கோடு உள்ள இடங்களில் தகுந்த சொல்லை வைத்துப் படி:—

*அளவாகச் செலவழிப்பது ———— .*

*அளவுமீறிச் செலவழிப்பது ———— .*

*ஆடைகள் மிகவும் ———— .*

சிக்கனம் — ஆடம்பரம் — அவசியம்

# 27. இயேசுநாதர்

(முன் பக்கம் உள்ள படத்திற்கு)

நம்மைப் படைத்தவர் கடவுள். கடவுள் நமக்கு எல்லா நன்மைகளேயும் செய்கிருர். அவர் உலகத்திற்குத் தந்தை ஆவார். அவரைத் தியானித்து அன்புடன் வணங்கவேண்டியது நமது கடமையாகும்.

உலகத்தில் பலர் வாழ்கிருர்கள். அவர்களில் சைவர்கள் சிவபெருமானே வணங்குகிருர்கள்; வைணவர்கள் திருமாலே வழிப்படுகிருர்கள்; கிறிஸ்தவர்கள் பரமபிதாவைத் தொழுகிருர்கள; இஸ்லாமியர்கள் அல்லாவைத் தொழுகிருர்கள். இவர்கள் ஒவ்வொரு மதத்தார் ஆவர். இவ்வாறு உலகத்தில் சைவம், வைணவம், கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், சமணம் முதலிய பல மதங்கள் உள்ளன.

கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவர்கள் உலகமெங்கும் இருக்கிருர்கள். கிறிஸ்து மதம் ஏற்படுவதற்குக் காரணமாய் விளங்குபவர் இயேசுநாதர். அவருக்குக் கிறிஸ்து என்பது மற்ருெரு பெயர். ஆகையால் அவரை இயேசுக்கிறிஸ்து என்று சொல்லுவார்கள்.

இயேசுநாதர் கர்த்தரால் (கடவுளால்) இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் சிறந்த ஞான மொழிகளே மக்களுக்கு உபதேசம் செய்தார். அவருடைய கொள்கைகளேப் பாதிரிமார்கள் உலகமெல்லாம் பரப்பிஞர்கள். கிறிஸ்துவப் பாதிரிமார்களேயும் மாதா கோவில்களேயும் முக்கியமான நகரங்களிலும், பல ஊர்களிலும் காணலாம்.

"எல்லோரையும் நேசிக்கவேண்டும். ஏழைகளுக்கு இரங்கவேண்டும். உலகத்தின் நன்மைக்கு

உழைக்கவேண்டும். கஷ்டப்படுகிறவர்களைக் கண்டால் அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க உதவிசெய்ய வேண்டும். தாம் கஷ்டப்பட்டாலும், பிறர் கஷ்டப் படுவதை நீக்க முயலவேண்டும். எவருக்கும் தீமை செய்யக்கூடாது. தீயவர்களைக் கண்டால், அவர்களைத் திருத்தும்படி கர்த்தரைப் பிரார்த்திக்கவேண்டும். கஷ்டங்களைப் பாராட்டக்கூடாது. பாவங்களைச் செய்யக்கூடாது. பாவம் செய்துவிட்டோம் என்று தெரிந்தால், அப்பாவத்தை மன்னிக்கும்படி கர்த்தரைப் பிரார்த்திக்கவேண்டும். பொய் சொல்லக்கூடாது. பிறர் பொருளை விரும்பக்கூடாது" இவைகள் கிறிஸ்து மார்க்கத்தின் சிறந்த கொள்கைகள். இக்கொள்கை கள் எம்மதத்திற்கும் சம்மதமானவைகளே.

| | | |
|---|---|---|
| மதம் | பரமபிதா | வழிபடுதல் |
| சைவம் | கர்த்தர் | தொழுதல் |
| வைணவம் | கொள்கை | உபதேசம் |
| கிறிஸ்துவம் | மன்னிப்பு | மாதாகோவில் |
| இஸ்லாம் | பிரார்த்திக்க | பாதிரிமார் |

### கேள்விகள்

1. மதங்கள் என்பன எவை ?
2. சில மதங்களின் பெயர்களைக் கூறு. உன்னுடைய மதம் எது ?
3. கிறிஸ்துமதத்தின் முக்கியக் கொள்கைகளைக் கூறு.

### பயிற்சி

கோடுள்ள இடங்களில் ஏற்ற சொல்லை வைத்து எழுது :—

1. சிவபெருமானை வணங்குவோர் ———— .
2. திருமாலை வழிபடுவோர் ———— .
3. பரமபிதாவைத் தொழுவோர் ———— .
4. அல்லாவைத் தொழுவோர் ———— .



# 28. கிராம ஆட்சி

நமது நாட்டில் சிறு சிறு ஊர்கள் அதிகம். இவ்வூர்களில் சில வீடுகளே இருக்கும். இவற்றிற்குச் சிற்றூர் அல்லது கிராமம் என்று பெயர்.

கிராமங்கள் ஆளப்படும் முறை கிராம ஆட்சி எனப்படும். அதாவது கிராமங்களின் காரியங்களை ஒழுங்காக நடத்துவது. பல குடும்பத்தார்கள் கிராமங்களில் வசிப்பார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தொழில்களைச் சரியாகச் செய்யவேண்டும்; தீயவர்களால் பயம் இல்லாமல் கிராமத்தில் குடியிருக்க வேண்டும். குடியிருப்பிற்கும் தொழில் செய்வதற்கும் வேண்டிய வசதிகளை அவர்கள் பெற்றிருக்கவேண்டும். நீர்வசதி, சாலைகள், சுகாதார ஏற்பாடுகள், சந்தைப் பேட்டைகள் முதலியன அவர்களுக்கு வேண்டிய வசதிகள்.

இவ்வசதிகளை எல்லாம் சர்க்கார் குடிகளுக்குச் செய்து கொடுக்கிறார்கள். ஊர்க்காவல் செய்வதற்குக்

காவற்காரர்கள் அல்லது சேவகர்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நீர்ப்பாசனத்திற்காக கால்வாய்கள் முதலியன வெட்டிக் கொடுக்கிறார்கள். குடிநீர்க் கிணறுகள் தோண்டிக் கொடுக்கிறார்கள், இலவசமாக மருந்துகள் கொடுத்து நோய்களைத் தடுக்கிறார்கள். போக்குவரவிற்கு சாலைகள் அமைத்துக் கொடுக்கிறார்கள். வழக்குகள் ஏற்பட்டால், விசாரித்து நியாயம் கூறுகிறார்கள். தீயவர்களைத் தண்டித்து அடக்குகிறார்கள். குடிமக்களைப் பாதுகாக்கிறார்கள். சிறுவர், சிறுமிகளுக்காகப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துகிறார்கள்.

இவ்வாறு பல நன்மைகளையும் செய்வதற்குப் பொருள் வேண்டும். அப்பொருளை அரசாங்கத்தார் குடிகளிடமிருந்து வரியாக வாங்குகிறார்கள். குடிகளிடமிருந்து வரிகளை வசூலிப்பதற்கு ஓர் அதிகாரிவேண்டும். கிராமத்தை அமைதியாகப் பார்த்துக் கொள்வதற்கும் ஓர் அதிகாரி வேண்டும்.

இக்காரியங்களையெல்லாம் கவனிப்பதே கிராம ஆட்சி எனப்படும். **கிராம முனிசீப்பு** என்பவர், கிராம ஆட்சியை நடத்தும் சர்க்கார் அதிகாரி. **கணக்கப்பிள்ளை** என்பவர், கிராம முனிசீப்புக்கு உதவியாளர். வரிக் கணக்குகள், நில அளவுக் கணக்குகள், சாகுபடி விபரம் இவைகளை அவர் குறித்து வைப்பார். நில வரிக்கு **வாய்தா** என்பது மற்றொரு பெயர். வாய்தா என்றால் தவணை. சர்க்காருக்குரிய நிலவரி பல தவணைகளில் வசூலிக்கப்படும். அதனால் வாய்தா என்ற பெயரே வழங்குவதாயிற்று.

வாய்தா வசூல், சிறு வழக்குகளை விசாரிப்பது, பெரிய அதிகாரிகள் வந்தால் அவர்களுக்கு உதவியாக

இருப்பது இவைகள் கிராம முனிசீப்பின் வேலைகள். பொதுவாகக் கிராமத்திற்கு உள்ள எல்லாப் பொது நன்மைகளேயும் அவர் கவனிப்பார். வெட்டியான், தலையாரி என்பவர்கள் சர்க்கார் சேவகர்கள். கிராமாதிகாரிகள் கூறும் சர்க்கார் வேலைகளே அவர்கள் செய்வார்கள்.

குடிகள் கிராமாதிகாரிகளுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும். கிராமங்களே நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| ஆட்சி | சர்க்கார் | நீர்ப்பாசனம் |
| வசதி | தோண்டி | இலவசமாக |
| சாலே | அமைத்து | விசாரித்து |
| குடிகள் | அரசாங்கம் | பாதுகாக்கிருர்கள் |
| வரிகள் | அதிகாரி | சாகுபடி |
| தவணே | வாய்தா | நல்ல நிலைமை |

### கேள்விகள்

*1. குடிகளுக்குச் சர்க்கார் செய்யும் நன்மைகள் என்னென்ன ?*

*2. கிராமத்துக்கு முக்கியமான அதிகாரி யார் ? அவருடைய வேலைகள் என்னென்ன ?*

*3. குடிகளின் கடமைகள் யாவை ?*

### பயிற்சி

சரியானபடி சேர்த்துப்படி :—

| | |
|---|---|
| *சாலேயின்* | *மருந்துகள் கொடுக்கப்படும்.* |
| *பெரிய சாலேகளில்* | *ஓரத்தில் நட.* |
| *பாடசாலேயில்* | *வண்டிகள் இடைவிடாது ஓடும்.* |
| *வைத்தியசாலேயில்* | *பாடங்கள் கற்பிக்கப்படும்.* |

## 29. விடுதலை

### விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

1. பறையருக்கும் இங்குதீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை;
திறமைகொண்ட தீமையற்ற
தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி
வாழ்வமிந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழையென்றும் அடிமையென்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழிகல்வி செல்வமெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர்தம்மை யிழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த
வகையினும் நமக்குள்ளே
தாதரென்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே. (விடுதலை)

—மகாகவி பாரதியார்




## 30. பொய் மெய்யாகுமா?

உத்தமபுரம் என்ற ஊரில் நல்லான் என்ற குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் உழவுத் தொழில் செய்து வந்தான். சிக்கனமாக வாழ்ந்து வந்ததால் அவன் நூறு ரூபாய் சேர்த்து வைத்திருந்தான். அவ்வூரில் பொல்லான் என்ற பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் நல்லானிடம் ரூபாய் இருந்ததை அறிந்தான். அவன் பிறரை வஞ்சிக்கும் எண்ணமுடையவன். அவனுடைய தீய குணங்களைப்பற்றி நல்லான் அறியமாட்டான்.

ஒரு நாள் பொல்லான் நல்லானிடம் வந்தான். "நல்லான்! எனக்கு ஒரு செலவு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நூறு ரூபாய் வேண்டும். அத்தொகையை நீ எனக்குக் கடனாகக் கொடு. அடுத்த வருடம் நான் அத்தொகையை வட்டி சேர்த்துக் கொடுத்து விடுகிறேன்" என்று கேட்டான்.

நல்லான் இரக்கம் உள்ளவன். அவன் பொல்லானின் வார்த்தைகளை மெய்யென்று நம்பினான். ஆகையால், தன்னிடம் இருந்த நூறு ரூபாயைப் பொல்லானுக்குக் கடனாகக் கொடுத்தான்.

ஒரு வருடம் ஆயிற்று; இரண்டு வருடங்களும் ஆயின. பொல்லான் நல்லானிடம் வரவே இல்லை. வட்டியும் வரவில்லை; அசலும் வரவில்லை. "வட்டிக்கு ஆசைப்பட்டுக் கடன் கொடுத்தேனே! அசலுக்கே மோசம் வரும்போல் இருக்கிறதே!" என்று வருத்தப் பட்டான் நல்லான். பிறகு அவ்வூர் நீதிபதியிடம் போய் முறையிட்டான்.

நீதிபதி பொல்லானை வரவழைத்தார். அவனைப் பார்த்து "நீ நல்லானிடம் நூறு ரூபாய் கடன் வாங்கினாயா?" என்று கேட்டார். அதற்குப் பொல்லான், "நீதிபதியே, நல்லானிடம் நான் கடனே வாங்கவில்லை" என்று பொய் சொன்னான்.

பிறகு அந்த நீதிபதி நல்லானைக் கூப்பிட்டார். "நீ அவனிடம் ரூபாய் கொடுத்தது யாருக்குத் தெரியும்?" என்று கேட்டார். உடனே நல்லான், "நான் பொல்லா னுக்குப் பணம் கொடுக்கும்போது வேறு யாரும் அங்கே இல்லை. ஒரு மரத்தடியில் நான் நூறு ரூபாய் எண்ணிக் கொடுத்தேன். அவன் அந்தத் தொகையை எண்ணி வாங்கிக்கொண்டான்" என்று சொன்னான். அதைக் கேட்ட நீதிபதி, "அப்படியானால் நீ போய்அந்த மரத்தை அழைத்து வா" என்று சொன்னார். மரத்தை அழைத்துவர முடியுமா? முடியாது என்பது நல்லா னுக்குத் தெரியும். ஆயினும், அதிகாரியின் சொல்லைத் தட்டாமல் அவன் சென்றான்.

கொஞ்ச நேரம் கழித்து நீதிபதி பொல்லானைக் கூப்பிட்டார். "நல்லான் இந்நேரம் அந்த மரத்தண்டை போயிருப்பானா?" என்று கேட்டார். உடனே பொல் லான், "ஐயா, அம்மரம் வெகு தூரத்தில் இருக்கிறது; அவன் இப்போது பாதி தூரம்தான் போயிருப்பான்" என்று பணிவாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் "நீதிபதி, கடனே வாங்காத உனக்கு அம்மரம் வெகு தூரத்தில் இருக்கிறது என்பது எப்படித் தெரியும்?" என்று கேட்டார். பொல்லான் பதில் சொல்லத் தோன்ருமல் 'திரு திரு' என்று விழித்தான்.

இரண்டு மணி நேரம் கழித்து, நல்லான் களேத்துத் திரும்பி வந்தான். வந்ததும், "ஐயா, தாங்கள் சொன்னபடி மரத்தை அழைத்தேன். அது வரவில்லே" என்று வருத்தத்தோடு சொன்ஞன்.

நீதிபதி, "நீ கவலேப்படவேண்டாம்; நீ போயிருந்தபோது இங்கேயே உண்மை விளங்கி விட்டது" என்று கூறிஞர். பிறகு பொல்லானேக் கூப்பிட்டார்; "நீ நல்லானே மோசம் செய்வதற்காகவே முதலில் முழுப்பொய் சொன்ஞய். ஆஞல் உன் வாயாலேயே உண்மை வெளியாய்விட்டது. ஆகையால், அசலும் வட்டியும் உள்ளபடி அவனுக்குக் கொடுப்பாயாக" என்று தீர்ப்புச் செய்தார்.

அவ்வாறே பொல்லான் முழுத் தொகையும் நல்லானுக்குக் கொடுத்தான். நீதிபதியின் அறிவுத் திறமையைப் பார்த்தீர்களா? பொய் மெய்யாக முடியுமா?

| | | |
|---|---|---|
| வஞ்சிக்கும் எண்ணம் | நீதிபதி | அதிகாரி |
| பாடுபட்டு | முறையிட்டான் | செலவு |
| அசல் | தொகை | மோசம் |
| வட்டி | கடன் | தீர்ப்பு |

### கேள்விகள்

1. *இந்தக் கதையால் விளங்கும் நீதி யாது?*
2. *உண்மையை மறைத்தவன் யார்? ஏன் மறைத்தான்?*
3. *கடைசியில் உண்மை எப்படித் தெரிந்தது?*

### பயிற்சி

*இந்தக் கதையைச் சுருக்கிச் சொல்லு.*

# 31. நாகரிகம்

நல்ல பழக்க வழக்கங்களும், நல்ல அறிவும் உடையவர்களாக வாழ்வது நாகரிகம் ஆகும். நல்ல உணவை உண்பது, நல்ல உடைகளை உடுப்பது, நல்ல பேச்சுகள் பேசுவது, நல்ல குணம் உடையவர்களாகப் பழகுவது, நல்ல செய்கைகளைச் செய்வது இவைகள் நல்ல பழக்க வழக்கங்கள்.

வெகு காலத்துக்கு முன்னே மனிதர்கள் நாகரிகம் பெருமல் இருந்தார்கள். அவர்கள் மிருகங்களைப்போல் அலைந்து திரிந்தார்கள்; காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்தார்கள். அப்போது ஊர்கள் உண்டாகவில்லை. வீடுகள் கட்டிக்கொள்ளவும் அவர்களுக்குத் தெரியாது. துணிகளை நெய்யவும் அவர்கள் அறியவில்லை. மரப் பட்டைகளை ஆடையாகக் கட்டிக்கொள்வார்கள். மரக் கிளைகளிலும், புதர்களிலும், பொந்துகளிலும், குடிசை களிலும் வசித்தார்கள்.

பயிர் தொழிலைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. நல்ல உணவுகளைச் சமைக்கவும் தெரியாது. காய், கனி, கிழங்குகளைப் பச்சையாகவே தின்பார்கள். பறவைகளையும் விலங்குகளையும் அடிப்பார்கள். அவற் றின் இறைச்சிகளைத் தீயில் சுட்டுத் தின்பார்கள். படிப்பு என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஆயுதங்களும், வண்டிகளும் அப்போது ஏற்பட வில்லை. மரக் கொம்புகளும், கற்களுமே அவர்களுக் குக் கருவிகள். கால் நடையாகவே அவர்கள் எங்கும் சென்ருர்கள்.

இவ்வாறு காட்டுமிராண்டிகளாய் அலைந்து திரிந்த மனிதர்கள் படிப்படியாக அறிவில் உயர்ந்தார்கள். குடிசைகளும், குச்சு வீடுகளும் கட்டத் தெரிந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பயிர்த் தொழிலில்

பழக்கம் ஏற்பட்டது. நூல் நூற்கவும், ஆடை நெய்யவும் தெரிந்தது. பாத்திரங்கள் செய்யத் தெரிந்தது. வாள், கலப்பை, மண்வெட்டி, ஈட்டி, கோடரி முதலிய கருவிகளைச் செய்யத் தெரிந்தது. உணவுப் பொருள்களைப் பக்குவமாகச் சமைக்கத் தெரிந்தது.

ஆங்காங்குப் பல ஊர்களை அமைத்துக் கொண்டார்கள். ஓரிடத்தில் நிலைத்து வாழ ஆரம்பித்தார்கள். பல தொழில்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். சமூகங்களாகக் கூடி வாழலானார்கள். எழுத்துக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு நூல்கள் எழுதினார்கள். இவ்வாறாக மனிதர்களின் நாகரிக வாழ்க்கை தோன்றிற்று.

| | | |
|---|---|---|
| நாகரிகம் | பொந்து | ஆங்காங்கு |
| மரப்பட்டை | குகை | சமூகம் |
| புதர்கள் | காட்டுமிராண்டி | படிப்படியாக |
| கோடரி | மரக்கொம்பு | பக்குவமாக |
| பச்சையாக | ஓலைச்சுவடி | எழுத்தாணி |

### கேள்விகள்

*1. நாகரிகம் என்பது எது ?*

*2. வெகுகாலத்துக்கு முன்னே மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் ?*

*3. படிப்படியாக அவர்கள் எப்படி அறிவில் உயர்ந்தார்கள் ?*

### பயிற்சி

*நாகரிகம் × அநாகரிகம் — இவை ஒன்றுக்கொன்று எதிர்ச் சொற்கள் ஆகும். இச் சொற்களில் ஏற்ற சொல்லைக் கோடுள்ள இடத்தில் எழுதிப் படி :—*

*நல்ல உடை உடுப்பது ———— .*

*அழுக்காடை கட்டுவது ———— .*

*நல்ல உணவு உண்பது ———— .*

*கெட்ட உணவு உண்பது ———— .*



## 32. வீரத்தாய்

(காட்சி 1)

*மகன் :* அம்மா, முரசொலி கேட்கிறது. போர் முரசுபோல் இருக்கிறதே!

*தாய் :* மகனே, ஆம். போர் முரசுதான் ஒலிக்கிறது. பகையரசர் நம் கோட்டைக்கு வெளியே வந்திருப்பார்கள். அதனுல் நம் அரசர் வீரர்களை அழைக்கின்ருர். உடனே நீ புறப்படு!

*மகன் :* அம்மா, போர் என்ருல் வீரர்க்கு உற்சாகம். புலியானது வேட்டைக்குப் போகாமல் புதரிலேயே இருக்க விரும்புமா? போர்க்கோலம் கொண்டேன். இதோ புறப்பட்டேன் அம்மா, ஆசி கூறுக.

*தாய் :* நன்றே செல்க, மகனே! பகைவரைக் கண்டு அஞ்சாதே. படைகளைக்கண்டு ஓடாதே. சிங்கத்தைப்போல் செல்க முன்னே, பகைவரை விரட்டியோட்டி, வெற்றியுடன் மீண்டு வா.

(காட்சி 2)

*வீணர் சிலர் :* அம்மா, உன் மகன் போரில் இறந்தான்.

*தாய் :* அப்படியா! நாட்டைக் காக்கப் போர் செய்து என் மகன் இறந்தானு? மகிழ்ந்தேன். போரில் இறப்பது வீரர்க்கு அழகு. தாய் நாட்டிற்காக உயிர் துறந்த என் மகனுடைய ஆவி நற்கதி அடைக.

*வீணர்கள் :* அம்மையே! மகிழ்ச்சியடைய வேண்டாம். நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்வது வீரர்களுக்கு அழகுதான். ஆனுல், உங்கள் மகன் போரில் புறமுதுகு காட்டி ஓடினுன். முதுகில் படுகாயங்கள்பட்டு இறந்தான்.

*தாய் :* என்ன சொன்னீர்கள்! என் மகன் புறமுதுகு காட்டி ஓடினுனு? முதுகில் காயம்பட்டு இறந்தானு? உண்மையாகவா? நான் இதை நம்ப வில்லை. இதோ போர்க்களம் செல்வேன். என் மகனுடைய முதுகில் புண் இருந்தால், அவனுக்கு பால் கொடுத்த மார்பை அறுத்து எரிவேன்.

(காட்சி 3)

*வீரர்கள் :* வீரத் தாயே! யாரைத் தேடுகின்றீர்?

*தாய் :* வீரர்களே! என் அருமை மகனுடைய உடலைத் தேடுகிறேன். எங்கே வீழ்ந்தான் அவன்?

*வீரர்கள் :* அம்மையே! உங்கள் மகன் பகைவர் படைகளை சின்னுபின்னம் ஆக்கினுன். அவ்வீரன்

ஆயிரம் பேரின் தலைகளை அறுத்தான். கால் வேறு, கை வேருக வீழ்த்திஞன் பல்லாயிரம் பேரை. எதிரிகள் பலர் குத்திய வேல்கள் அவன் மார்பிற் பாய்ந்தன. அதனுல் மண்ணிற் சாய்ந்தான் மாவீரன். முன்னணியில் அவன் உடல் வீழ்ந்திருக்கிறது. இதோ பாருங்கள்!

*தாய் :* ஆகா! மகிழ்ந்தேன். பிள்ளையைப் பெற்ற பயனை இன்றே அடைந்தேன். அறிவிழிகள் பொய் உரைத்தார்களே! இவன் முதுகில் ஒரு சிறு காயமும் இல்லையே! மார்பில் அல்லவோ பல காயங்கள் காண்கின்றன. நெஞ்சில் வேல் பாய்ந்து தான் இவன் இறந்தான். நாட்டைப் பாதுகாக்கப் பகைவரோடு போர் செய்தான். பகைவரையும் வெற்றி கொண்டான். உயிரையும் நாட்டிற்கு அளித்தான். புகழ் உடம்போடு என் மகன் விளங்குவான்.

| | | |
|---|---|---|
| முரசு, ஒலி | ஆசி | போர்க்கோலம் |
| எதிரி | முன்னணி | விரட்டியோட்டி |
| வீழ்த்திஞன் | விழுங்கி | படுகாயம் |
| சின்னுபின்னம் | பாய்ந்து | போர்க்களம் |
| வீணர்கள் | அறிவிலி | வேல்பாய்ந்து |

## கேள்விகள்

1. *வீரத்தாயிடம் வீணர்கள் என்ன சொன்னுர்கள் ?*
2. *வீரத்தாயின் சபதமொழி என்ன ?*
3. *வீரத்தாய் போர்களத்தில் அறிந்த உண்மை என்ன ?*

## பயிற்சி

இக் கதையைச் சுருக்கிச் சொல்.

## 33. வாழ்த்து

பாலைவனம் சோலைவன மாகவேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருகவேண்டும்
சபைகளிலே தமிழெழுத்து முழங்கவேண்டும்
சீலஉடை கதருடையாய்த் திகழவேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளரவேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டும்
வெற்றியின்மேல் வெற்றிஎமக் கெய்தவேண்டும்.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## 34. ஆத்திசூடி

1. குணமது கைவிடேல்.
2. கேள்வி முயல்.
3. சக்கர நெறி நில்.
4. சான்றோர் இனத்திரு.
5. செய்வன திருந்தச்செய்.
6. தக்கோன் எனத்திரி.
7. தூக்கி வினைசெய்.
8. தேசத்தோடு ஒத்துவாழ்.
9. நன்மை கடைப்பிடி.
10. நூல்பல கல்.
11. நேர்பட ஒழுகு.
12. பீடுபெற நில்.
13. பெரியாரைத் துணைக்கொள்.
14. பேதமை அகற்று.
15. பொருள்தனைப் போற்றிவாழ்.
16. உத்தமனாய் இரு.
17. ஊருடன் கூடிவாழ்.
18. வைகறைத் துயிலெழு.
19. மேன்மக்கள் சொற்கேள்.
20. வித்தை விரும்பு.

—ஔவையார்

# 35. கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
4. ஏவா மக்கள் மூவா மருந்து.
5. கீழோர் ஆயினும் தாழ உரை.
6. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
7. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
8. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
9. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவார்.
10. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
11. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
12. தேடா தழிக்கின் பாடா முடியும்.
13. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
14. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
15. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
16. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
17. பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
18. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
19. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
20. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
21. மேழிச் செல்வம் கோழை படாது.
22. வளவன் ஆயினும் அளவறிந்து அழித்துண்.
23. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
24. வீரன் கேண்மை கூர்அம் பாகும்.
25. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

—ஔவையார்

47808

6c
A80
20/7
RTR/1181/3

# TAMIL NATTU VACHAKAM

## THIRD BOOK

*Approved by the Madras Text Book Committee for class use : Vide page 2 of consolidated List Part I. Dated 4—4—56.*

EDITED BY

MANI. MUTHUSWAMY

MURUGAN PATHIPPAGAM

TIRUCHIRAPALLI-2.

*Copyright]*

*[Price : 50 na.Pa.*